1272

1272-

ஜெப கீர்த்தனை பூங்கொத்து



[illegible] கத்தோலிக்கு மிஷன் [illegible]

[illegible]

இயற்றப்பட்டு [illegible]

கோலார் தங்கவயல்

1941

+

264.1

A. M. D. G.

ஜெப கீர்த்தனை பூங்கொத்து

336

கிறிஸ்துவர்கள் ஞாயிறு பூசைக்கும், தேவ நற்கருணை ஆசீர்வாதத்திற்கும், திருமணி ஆராதனை தியான ஜெப நேரங்களிலும் ஏகோபித்து பாடவும் ஜெபிக்கவும் இயற்றப்பட்டிருப்பதுமன்றி, திவ்ய சற்பிரசாதம் உட்கொண்ட பிறகு செபிக்கும் நன்றி யறிந்த தோஸ்திரமும், தேவ நற்கருணை சந்திப்பு ஜெபமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

Q6:4146

Imprimatur :

P. JACQUEMART,

Vicar General, Bangalore.

11th October 1940.

பொருள் அட்டவணை.

சேசுவின் திரு இருதயத்தின் பேரில்

1. தேவ நற் கருணையில்
2. தேவ ப்ர சாதனே
3. சேசுவின் மதுர
4. என் யேசுவே
5. ஓ நல்லிருதயமே
6. நலம் சுரப்பீர்
7. சேசுவின் சேசுவின்

12 MAR 1941
MADRA

“ திவ்ய சற் பிரசாதத்தின் பேரில் ”

8. பரிசுத்த பரம நற்கருணைக்கு
9. தேவ நற்கருணையே
10. யேசு நேசிக்கிறார்
11. எழுந்தருள் வீர்
12. சுவாமி தயை கூர்ந்து
13. வாரும் இதயம் சேரும்
14. ஓ தேவ சற்பிரசாதமே
15. நித்திய ஸ்துதிக்குறிய
16. வாரும்,வாரும் யேசுவே

"சேசுகிறிஸ்து நாதரின்பேரில்"

17. ஆதியந்தமில்லா தேவா
18. சுரர் தொழும்
19. மாட்சி நிறை தேவா
20. உன்னத திருத்வ தேவா
21. பரம நன்னேச பிதாவே
22. ஜீவப்பர பிரம்ம நாதா
23. யேசு நாமத்தை

"கிறிஸ்து ராஜாவின் பேரில்"

24. கிறீஸ்துவின் இராஜரீகம்
25. தேவ ராஜ்யம் வருக

"கர்த்தரின் ஆகமனம்"

26. கருணை கடலே வா
27. சுவாமி உந்தன்

கர்த்தர் பிரப்பின் பேரில்

28. வாருங்கள் பக்தரே
29. உதித்தார் சுதனரிய
30. ஆரி ராரி ராரோ
31. ஆனந்தமே

"திருபாடுகளின் பேரில்"

32. இரக்க மென்றும்
33. ஜெகதல மீடேர
34. ஆளு மென்
35. நிதமும்

"மனஸ்தாபத்தின் பேரில்"

36. கெட்டுப் போனோம்
37. தள்ளி விட்டால்
38. அத்தனே

"கர்த்தர் உயிர்த்ததின் பேரில்"

39. அல்லேலுயா
40. பூலோக ரட்சகர்

கர்த்தரின் ஆரோகணத்தின் பேரில்

41. மோட்ச மதிலெழும்

"இஸ்பிரீத்து சாந்துவின் பேரில்"

42. இஸ்பிரீத்து சாந்துவே வாரும்
43. தேவகதிர் வரவிடும்

"தேவ ஸ்துதிகள்"

44. தேவ ஸ்துதிகள்
45. வானவர் புகழ்ஜோதி
46. ஆதியே பகா பொருளே

பரிசுத்த தேவ தாயின் பேரில்

47. அமல ஊரணி
48. வந்தோ முன் மைந்தர் கூடி
49. காரு மெங்களையே
50. யாத்ரி கட்கு பாதை
51. வாழ்த்துவோம்
52. வானோர்க்கரசி
53. சர்வ நேச மாமரி
54. நந்தவன செந்தளிரே

55. நீயொரு தாயொரு
56. மசபியே லெனும்
57. ஜெயம் ஜெயம் மரியே
58. பாக்கிய வானோர்கட்கு
59. மகிமையிலிலங்கும்
60. பிறந்தது மே மாதம்
61. உத்தரீகம் கை நீண்ட
62. அறிய சேசுபரனே
63. வானவர்கள் ஆண்டவளே
64. சிவ கருணாலயனால்
65. மங்களஞ்சிருங்கார
66. பாவிகளுக்கடைக்கலமே
67. பிரார்த்தனே
68. திரு மகனறையுண்ட

அர்ச்: சூசையப்பர் பேரில்

69. சூசைமானிரையோனே
70. மதுமலர்
71. நீ தயைகூர்ந்தெமக் கீ முனி

"அர்ச்சிய சிஷ்டவர்கள்பேரில்"

72. பாதுகாத்தருள் புரிவாய்
73. சந்தமா முதலோனுக்குறிய
74. உத்தம வங்கிஷத்தில்
75. லீசியோ நாட்டின்
76. நற்புகழ் பாடுவோர்க்கு
77. சிந்தரசின் மாமகிழ்
78. உத்தரிக்கும் எங்கள்

"பொது பாட்டுகள்"

79. வானவர்களின் தேவனே
80. உன்னதனின் மகிமையை
81. என்னுேடிரும்
82. உம்மண்டை தேவனே
83. 'அபிராமின் கர்த்தரே'
84. இன்று செம்மலர்சூடி

மோட்சத்தின்பேரில்

85. மனமே மனமே மனமே

ஜெபமாலே

86. சந்தோஷ தேவரகசியம்
87. துக்க ,,
88. மகிமை ,,

"திவ்ய பலி பூசை"

89. கீறியே
90. குளோரியா
91. கிரேதோ
92. சாங்துஸ்
93. ஆக்னுஸ் தேயி

"திவ்ய நற்கருணை ஆசீர்வாதம்"

94. ஓ! சாலு தாரிஸ்
95. பானிஸ் ஆஞ்ஜலிக்குஸ்
96. எக்சே பானிஸ்
97. ஆவெ மாரிஸ்தெல்லா
98. சால்வெரெஜிஞ
99. கோர் ஜேசு

100. துயெஸ் பெத்ருஸ்
101. தாந்தும் எர்கோ
102. லௌதாத்தே தோமினும்

திவ்ய சற்பிரசாத திருமணியாராதனை ஜெபங்கள்

103. முதல் கால்மணி ஜெபம்
104. 2 ம் „ „
105. 3 ம் „ „
106. 4 ம் „ „

" திவ்ய நற்கருணை சந்திப்பு "

107. திவ்ய நற்கருணை சந்திப்பு
108. திவ்ய நன்மை உட்கொள்ளுமுன் ஜெபம்
109. „ உட்கொண்ட பின் „
110. ஆசை நன்மை ஜெபம்
111. சகாய மாதா ஜெபம்
112. பரிபூரண பலனையடை ஜெபம்

காலை மாலை ஜெபங்கள்

113. காலை ஜெபம்
114. மாலை ஜெபம்
115. திரிகால ஜெபம்
116. பாஸ்கு திரிகால ஜெபம்
117. அர்ச் : ரீத்தம்மாளை நோக்கி ஜெபம்
118. அர்ச் : சூசையப்பரைக்குறித்து சகிர்த மன்ருட்டு
119. அர்ச் பார்பரம்மாள் ஜெபம்

ஜெப கீர்த்தன பூங்கொத்து

1

"தேவ நற்கருணையில்"

தாளம்—ஆதி: இராகம்—சங்கராபரணம்:

1. தேவ நற்கருணையில் சிநேகபலியாய் நிற்கும்
சேசுவின் திரு இருதயமே—பொல்லாத்
தீய மனிதர் செய்யும், தீமையகற்றி உம்மைச்
சிநேகித்து வந்து வாழ்வ தெப்போ.

2. வானமதில் நிறையும்—ஞான நன்மைகள்யாவும்
வற்றா தென்றும் சுரக்கும் சுனையே—மிக்க
வன்மன மானிடர்கள் நன்மைசேர் உம்மிதயம்
வாழ்த்திப் புகழ்ந்துவப்ப தெப்போ.

3. பதிதர் அஞ்ஞானிகளுன் பரம இருதயத்தை
பழித்து பகைக்க விடலாமோ—இவர்
பாவம் அருத்துன் திவ்ய பந்தியில் சந்ததமும்
பணிந்து மகிழ்ந்துவப்ப தெப்போ.

4. இந்த ஊரினில்வரும் எந்த கொடும்பிணி நின்
றெமைக்காத்து ரட்சிப்பாய் இதயமே—உமக்
கெங்கள் இருதயத்தை இசைந்த கைம்மாராக உம்
இடத்தில் கொடுத்து வைத்தோம் இப்போ.

2

"தேவப்பிரசாதனே"

தாளம்—ஆதி : இராகம்—காம்போதி :

தேவப்ரசாதனே திவ்ய குணளனே
திரு இருதயமே தினம் ஸ்துத்யம்

1. பூவுலகுயிரே— பொங்கொளி சுடரே
பொருவில்லா கிருபையின் புண்ணிய பூங்காவே
ஜீவனே தரும்நல் அமுதளிப்பாயே
திரு இருதயமே தினம் ஸ்துத்யம். (தேவ)

2. ஜென்ம மாவிஷத்தால் திரண்டபல்தோஷம்
தீர்க்க உன் உயிரதை சிலுவையில் தந்தாய்
திவ்ய நல் அமுதாம் தேவருள் விருதாம்
திரு இருதயமே தினம் ஸ்துத்யம். (தேவ)

3. தாயினும் அன்பாய் தாங்கிடுவாயே
தயை சாந்தமுள்ள இருதயமே நீ என்றும்
நோயினு மயராய் நோக்கம் விட்டகலாய்
நொடி அளவெம்மை நீ மறப்பாயோ. (தேவ)

4. வானுலகோரே மங்களம் ஸ்துத்யம்
மாறுமல் ஒயாமல் மகிழ்ச்சியாய் பாடுவீர்
மகிமை சேர் இதயம் புகழை என்றேயா
வாழ்த்தி நாம் ஸ்துதிப்போம் வருவீரே. (தேவ)

3 "யேசுவின் மதுர திரு இருதயமே"

தாளம்—ஆதி : இராகம்—சங்கரா

1. யேசுவின் மதுர திரு இருதயமே
சிநேக அக்கினி மயமே
தினமும் நீர் எங்கள் சிநேகமாயிருப்பீர்
தேவ தயா நிதியே. (யே)

2. மனிதரை மோட்ச—கதியினில் சேர்க்க
மனுமகனாய் பிறந்தாய்
மகிமைப் பிரதாப கடவுளானாலும்
மா பழி மேல் சுமந்தாய். (யே)

3. என்றும் எம்மோடு இருந்தருள் ஈவாய்
இனிய நல்லுணவாவாய்
இவையெல்லாம் பாரா தீனர்கள் நாங்கள்
இகழ்ந்தும்மை பழித்தோமே. (யே)

4. அந்தியகாலம் வந்திடுங்காலே
அவஸ்தையாய் நாம்கிடந்தால்
அடைக்கல தஞ்சம் ஆகநீ இருப்பாய்
அன்புள்ள இருதயமே. (யே)

4 "என் யேசுவே"

இங்லீஷ் மெட்டு :

என் யேசுவே என் நல்லேசுவே
உமது நேசம் தந்தருளும்
இரக்கமான இரட்சகரே
எமது பாவங்களைப் பொறும்.

1. விலையில்லா விருதயமே—
மேலுலகோ ரதிசயமே
உலகத்தின் திரவியமே—
சகலர்க்கும் ரட்சணியமே. (2 தரம்) (என்)

2. வானுலகில் வீற்றிருந்தநீர்—
ஈன பாவிகட்கிறங்கினீர்
மானிடவேஷம் நீரெடுத்தீர்—
மன்னுயிரை மீட்டிரட்சித்தீர். (2 தரம்) (என்)

3. சருவ நன்மையுந்தரவே—
தயவாய் எம்மை யழைக்கின்றீர்
சட்டைபண்ணுமல் நாமிருக்க—
சாந்தமுடன் காத்திருக்கிறீர். (2 தரம்) (என்)

4. புத்தியுடன் சுத்த மனதும்—
பத்தியும் என்றும் தந்தருளும்
சுத்த சிநேகத்தின் சுடரும்—
சுவாலிக்க பண்ணியருளும். (2 தரம்) (என்)

5 "ஓ நல்லிருதயமே"

(இ-ம். 1939 செப்டம்பர் மாத திரு இருதயதூதன்.)

1. ஓ நல்லிருதயமே நேயமுடன்
உமை பாடியே நிதம் தேடிடுவோம்
ஓ நாதனே, தேவனே நல்லன்பனே
திருஜீவிய அப்பத் தேன் சுனையே
உம்பர்கட்கரசே நீ—உன்னத ஒளியே நீ
ஆசையின் கடலேநீ—யேசு எம்பெருமானே. (ஓ)

2. ஓ அன்பினால் எம்மை யண்டிவந்தாய்—உம்மை
தொண்டர் யாமென்றும் தோத்தரிப்போம்
ஓ துன்ப உலகத்தின் வம்பை வென்று—உன
தின்ப நாடெமை சேர்த்திடுமே
பூவுலகுயிரே நீ—பொங்கொளி சுடரே நீ
பொற்புறு அருளே நீ-போற்றுவோர் பெருமானே.
(ஓ)

3. ஓ நேச நல்லாண்டவா தீயராம்
எம்பவம் நீக்கி எமைக்காத்திடுவாய்
ஓ பாரில் நிகழ்ந்திடும் போரதனிலே தினம்
பாசத்தோ டெம்மை பாதுகாப்பாய்
மக்களின் கதியே நீ—மன்னரின் ஈசனே நீ
மாண்புடை தாயனே நீ--மாபுகழ் பெருமானே. (ஓ)

6

"நலம் சுரப்பீர்"

(இ-ம்: 1939 ஜூன் மாத திரு இருதய தூதன்)

1. நலம் சுரப்பீர் புரிவீர் பொழிவீர் இதயமே
பலம் தருவீர் அருள்வீர் களிப்பீர் தேவனே
தீர்த்தார் பாவப்பிணியை இரட்சித்தார் எமையே
ஈன்றூர் நேச ஊற்றின் அமலர்பெரும் அருளையே.
(2-தரம்)

2. இரக்கம் சாந்தம் ஸ்நேகம் ஓங்கிட
கருணை மகிமை கன்னிமை மேவிட
ஏற்பீர் எம்பணிவை நீக்கிய பழிதனை
ஈவீர் உம்தயவை தேற்றிய மக்களை. (2-தரம்)

3. பதிதர் துலுக்கர் அதமர் எனையோர்
அமரர் குமரர் உத்தமர் வணங்கிட
ஆள்வீர் எம் உள்ளத்தில் போக்கியே தீதனை
கொள்வீர் எம்இதயம் அகற்றியே இருள்தனை.
(2 தரம்)

7

"சேசுவின்"

சேசுவின் சேசுவின் திரு இருதயமே
என் நம்பிக்கையை உமதுபேரில் வைக்கிறேன். (3-தரம்)

8

"பரிசுத்த பரம நற்கருணைக்கு"

தாளம்—ஆதி : இராகம்—சங்கராபரணம் :

பரிசுத்த பரம நற்கருணைக்கு ஸ்துதி என்றும்
பணிந்து போற்றிடுவோமே மனமது சேர்ந்து.

1. திரித்துவ இரண்டாம் ஆள்—எனும் ஜகரட்சகா
தேவ நற்கருணையில் பூவில் வந்திருப்பவா
அருச்சனை புரிந்துந்தன் திருத்தயை பாடவே
அடியோர்கள் திடங்கொண்டுன் அடியினை
யிடம்வந்தோம். (பரி)

2. வானுலகத்தில் நின்று நான் என மனுஷனாய்
வந்து மலைக்குகையில் நொந்ததும் போதாமல்
தேன் அமிர்தம் பொழி—ஞானம் உரைத்துப்பின்
திருபந்திதனிற் சேர்ந்தாய் இரக்கமாய்
எமைபார்த்தாய். (பரி)

3. பன்னிரு சீஷர்கள்—உன்னோடு கூடியே
பந்தி யமர்ந்துமிக—சிந்தை கலங்கி நிற்க
உன்னறிய விதம்—சொன்ன அப்பங்கொடுத்தாய்
உண்டு புசிப்பீரென்றே—எந்தன் சரீர
மென்றே. (பரி)

4. வாழி வானோர்களின்—மகிழ்ச்சிசேர் போஜன
வாழி கன்னி மரியின்—மகனா யுதித்தவா
வாழி மூவுலகமோர்—வார்த்தையால் படைத்தவா
வாழி யென்றென்றும்மை வாழ்த்தி
ஸ்துதிப்போமே. (பரி)

9 "தேவ நற்கருணையே"

இராகம்—இங்கிலீஷ் :

தேவ நற்கருணையே—தெய்வீக விருந்தே
சீவிய வரந்தாரும்—திவ்ய யேசுவே.

1. ஆத்துமத்தின் சீவியம்—ஆனவர் நீரே
காத்திருக்கிறோம் உம்மை—காதலாகவே. (தேவ)

2. பசித்தவர் போஜனம்—பானம் தேடல்போல்
பாவிநான் தேடுகிறேன்—தேவரீரையே. (தேவ)

3. உம்மை உண்டவர்களே—உயிர் வாழுவார்
உம்மை உண்ணாதவர்கள்—உயிர் மாளுவார். (தே)

4. விண்ணவரின் அப்பமே—வேக நேசத்தால்
மண்ணவரின் அப்பமாய்—மாறி வந்ததே. (தேவ)

5. நேசமான யேசுவே—நீசபாவி நான்
ஆசையாலே அண்டினேன்—ஆசி கூறுவீர். (தே)

10 "யேசு நேசிக்கிறார்"

இராகம்—இங்கிலீஷ் :

1. யேசு நேசிக்கிறார்—யேசு நேசிக்கிறார்
நீசனான என்னையும் அதிகமாய்—யேசு
நேசிக்கிறார். (யேசு)

2. சுவாமிநீர் என்மேலே—நேசம் வைப்பதற்கு
தாசனான பாவஈனன் நான்என்ன—தவமது
செய்தேனோ. (யேசு)

3. அன்பின் வாசமே—இன்ப யேசுவே
துன்பமெத்த உமக்கு வருவிக்கும்—துஷ்டன்
நானல்லவோ. (யேசு)

4. பற்றின்றி நான்செய்த—பாவத்தை எண்ணாமல்
சற்பிரசாதத்தில் என்றுமிருக்கிற—சர்வ
நாயகா. (யேசு)

5. சிரமது வணங்கி—சிந்தை உருகியென்
இருதயத்தை உமக்குத் தருகிறேன்—இரக்கஞ்
செய்வீரே. (யேசு)

11 "எழுந்தருள்வீர்"

(திரு இருதய தூதன்)

எழுந்தருள்வீர் எசுநாதா
இதுவேளை நீரே எழுந்தருள்வீர்
விழுந்துன்பதம் வேண்டினேன் வாராய்
செழுமைமிகர் தேவசற்பிர சாதநேயா. (எழு)

1. அழுந்திப்பவ ஆழிமீதிலே நெளிந்துழலும்
நீசமானிடர்க ளானோர்—நெளிந்துழலும்
தெளிந்தே கரைதேற்றும் வண்ணமே
பொழிந்தருள்வீர் பூசிதவுன் ஞசீர்வாதம். (எழு)

2. எந்தனை யுண்போர்—என்றும் வாழுவார்
நிந்தனைசெய்வோர்
நிதம் சாவார்களே என்றுநிந்தனை செய்வோர்
சந்தேக மறச்சாற்றி யுன்சதை
தந்தீர் ஓர் அப்ப சாயலாய் நன்னயமாக. (எழு)

3. அப்பரசத்தில் அமர்ந்தருளி எப்போதுமுன்னை
இதயத்தில் நாங்கள் எண்ணி எப்போதுமுன்னை

துப்பாய் கொள்ளவே சொன்னீர் அந்நாளில்
ஒப்பில்லா நவம் ஒழுங்கிடு நற்பாகனேநீர். (எழு)

12 " சுவாமி தயை கூர்ந்து "

இராகம்—காம்போதி : தாளம்—ஆதி :

சுவாமி தயைகூர்ந்து எழுந்தே வருவீர்
நாமே களிக்க உம்மையே தருவீர். (சு)

1. மாரி முகம்ப பார் பயிர்போல் குலைந்தோம்
பாரில் துயரால் தினமே யலைந்தோம். (சு)

2. தாயை பிரிந்த சிசுபோல் அயர்ந்தோம்
நோயால் வருந்தி உனைநாம் துயர்ந்தோம். (சு)

3. நீயே எனக்கு உயிராம் உயிரே
வாயே மழைபோல்—நான் உன் பயிரே. (சு)

13 " வாரு மிதயம் சேரும் "

Air :

'The Voice that breathed o'er"

1. வாருமித யம்சேரும்—வரம்தர நேரும்
பாருமுன் றயைகூரும்—பழவினை தீரும்.

2. தாருமுன் றன்சரீரம்—தலையில்லா ரத்தம்
வாருமிது நன்னேரம்—மானிடர்க்கே தத்தம்.

3. தமதுட லுணவாம்—தாஞ்சொரி யுதிரம்
அமுதுசு மணமாம்—அளித்தீர் மதுரம்.

4. தேவாவுமை நம்பினேம்—தினமுணவிலா
மேவுமுயிர் வெம்பினேம்—மீதெழும் விமலா.

5. பெருமை வேதாசாரம் பேருலகாதாரம்
இருகுண வாகாரம்—எழுபகாரம்.

14 "ஓ! தேவ சற்பிரசாதம்"

Air:

"All ye who seek a sure relief"

1 ஓ! தேவ சற்பிரசாதமே—
ஓ தயையின் ஊற்றே
மாதேவ எம்மில் என்றுமநீர்—
வாசம் செயலானீர்.
ஓ சேசு கிறீஸ்துவே நமோ—
ஓ சினேக தேவனீர்
நீசர்களாம் எம்மேல் வைத்த—
நேசமென் சொல்வோம் யாம். (ஓ)

2. விண்ணோர் விருந்தே நீரெங்கள்—
வெம்பவம் நோக்காமல்
மண்மீதெஞ் ஞான்றும் அன்பினல்—
வாசஞ் செயலானீர். (ஓ)

3. தாதரா மெங்கட்கா வுயிர்—
தந்ததல்லா தெங்கட்
கோது முணவாய் நாதனே—
உம்மை நீரே தந்தீர். (ஓ)

4. தீதெல்லாம் போக்கி எம்மைவான்—
சேர்க்க வுமக்குள்ள
காதலினலோ யாதிவண்—
காத்திருக்கின்றீர் நீர். (ஓ)

15 "நித்திய ஸ்துதிக்குறிய"

நித்திய ஸ்துதிக்குறிய பரிசுத்த பரம திவ்ய நற்கருணைக்கு சதா காலமும் ஆராதனையும், ஸ்துதியும், தோத்திரமும், நமஸ்காரமும் உண்டாகக்கடவது. (3 தரம்.)

16 "வாரும், வாரும், யேசுவே"

Air :
"Jesus Jesus come to me"

1. வாரும் வாரும் யேசுவே
வானவரின் போஜன
காரும் கடைய ரெம்மைக்
காருண்ய கடலே வா.
சீரார் வரந் தாருமே
ஏரான் மாவைக் காத்திட
பாராம விராதேயும்
பண்ணேர்க ளாண்டவனே.

2. சித்தம் வைத்துப் பேதையர்
பத்தி மன்ருட்டைக் கேட்டுச்
சுத்த மனந் தந்துமே
நித்த மெம்மில் வாருமே. (சீரா)

3. கடலில் துரும்பைப்போல்
திடமில்லாமல் நிற்கும்
கடையேன் கண்ணீர் நோக்கி
கடைதேற்றும் சேசுவே. (சீரா)

4. உன்னத நும் நாமத்தை
உவந்து நாளும் போற்றி
உண்மை விசு வாசத்தில்
ஊன்றி நிற்கவே நாளும். (சீரா)

17

சேசு கிறிஸ்துநாதரின் பேரில்
"ஆதியந்த மில்லா தேவா"

Air:

"O take me to Thy Sacred Heart"

1. ஆதியந்த மில்லா தேவா
ஆறு லட்சணனே
சோதி மோட்சபாதை செல்ல
சேசு வரம் தாரும்.
ஓ நம்பிக்கையின் வாசலே
விண்ணக ஏணியே
வண்ண மோட்சலங் காரமே
தண்ணருள் தாருமே.

2. ஞானமிர்த தடாகமே
ஞாலத்தின் காரணமே
தேனமிர்த நின்தாளினை
தேடினேன் காருமே. (ஓ நம்)

3. சித்தாந்த முத்தி முதல்வா
சிட்ட ராணந்தமே
சித்தமிலங்கி நாளுமே
முத்திவரந் தாருமே. (ஓ நம்)

18 "சுரர் தொழும்"

Air:

"Sweet Heart of Jesus"

1. சுரர் தொழும் சுந்தரஞான தேவா
சுதனே சேசு ராஜாவே தோத்ரம்
நரர் செய்த பவபிணி போக்கவே
நாட்டி யருளூட்டினீர் தோத்ரம்.
சீவ இன்பமான சேசுவே
பாவஇருள் போக்கி கடைகண் பாரும்.

2. வானோர்களின் இன்னெழில் ஜோதியே
வண்ண மோட்ச பத்ராசனதியே
சேனோர்களின் பக்தி நம்பிக்கையே
சேயர்களாம் எமக்கருள் புரியும்.

3. தூயநின் திருநெறி யறியா
துர்த்தர் செய்யும் பிழை யதனையே
நேயமுடனே பொருதி தாருமே
நேசநல் லிருதயமே தோத்திரம்.

19

"மாட்சி நிறை தேவா"

Air :
"Heart of Jesus"

1. மாட்சிநிறை தேவாநின்—
மாண்புரும் கழல்போற்றி
சூட்சிசெய்ய லகையின்—
சூதான தந்த்ரமதில்
காத்தெமை ரட்சிக்கவே—
காருண்ய தேவா வும்மையே.
போற்றினேம் உம்மின் பொற்கழலை
பொறுதி தந்தெமை யாட்கொள்வீரே
பொறுமையின் நிலையே—பொற்குணமே
போற்றும் தனையரை காத்தருளும்.
2. நேசநல் விருப்பிடமே—நேயநல் லிருதயமே
பாசமாம் பிணிபோக்கி—பாரினில் காத்திடவே
தாசரின் மன்றுட்டையே—தாபரித்தருள்புரிவாய்.
3. விண்ணவரின் போஜனு—விமல சுதன்பரா
மண்ணோருமை யறியவே--மாண்புடன் வரந்தாரும்
இன்ப சேசுவின்திரு—இருதயமே நித்தியம்.

20

"உன்னத திரித்வ தேவா"

Air :
"I need Thee Precious Jesus"

1. உன்னத திரித்வ தேவா—உம்பரின் ஜோதியே
உந்த னுதிரம் சிந்தியே—உலகைக் காத்தவா
2. நீசனுமென் னெஞ்சதில்—நித்யாநின் காயத்தை
பாசத்துடன் பதித்துமே—பாவியழ செய்யும்.

3. பூங்காவில் நரர்க்காக—பூவன ரட்சகா
தாங்கொணு கஸ்திவாதையை-தாமேற்ற தற்பரா.

4. பாவியென்றே நீரென்னை—பார்த்து தள்ளாதேயும்
தாவீதின் தவசீலரே—தாசரெம்மைக் காரும்.

21

"பரம நன்னேச பிதாவே"

Air: "O! God whose mighty"

1. பரம நன்னேச பிதாவே
பாரில் வியாபக னீரே
சுர ரணிவதியும் பரம்
சூழ்விண்ணி வாச னீரே.

2. உன்னத உன்னும மிகத்து
உரிய வர்ச்சனை பெற
பொன்னுலகு வாழவே யுன்றன்
புனித ராஜியம் வர.

3. அகத்திய மானவாகாரம்
அளிக்க சித்தம் கொள்ளுமே
இகத்திலு மாசீர்வதித்து
எமைக் காக்கவே விள்ளுமே.

4. சோதனையினின் றெம்மைக் காரும்
சோதிமயன் வழி நீக்கும்
வேதநெறி வழுவி யின்று
விழாதுன் கடைக்கண் ணேக்கும்.

22

"ஜீவப் பரப்பிரம நாதா"

இராகம்—சங்கராபரணம்: தாளம்—ஆதி:

ஜீவப் பரப்பிரம்ம நாதா—உந்தன்
சேவடி யண்டினேரை—காத்தருள் தாதா.

1. காவலன் நீ எனக்கு அல்லவோ—சுவாமி எந்தன்
பாவம கற்றிட நான் சொல்லவோ—தயை
இல்லையோ. (எங்கள்)

2. தந்தை நீ என்றுன் பதம்சேர்ந்தேன்—அருள்
தந்திடவே அடியான் நேர்ந்தேன்— மனம்
சோர்ந்தேன். (எங்கள்)

3. ஜல மின்றிதா மரைக்கு நிலையோ—உந்தன்
நலம் அருள் ஈதல் பெரும் மலையோ—கையில்
இல்லையோ. (எங்கள்)

4. தனம்பொருள் உனையெப்போ கேட்டேன்-எந்தன்
மனம் அதில் உனை அன்றி நாட்டேன்
விடமாட்டேன். (எங்கள்)

Air: "Jesus Dulcis Memoria"

23

"யேசு நாமத்தை"

1. யேசு நாமத்தை சொன்னாலும்
இருதயம் பூரிக்குமே.
யேசு நம்மோடே யிருக்கில்
எவ்வளவு ஆனந்தமோ

2. தேனின் மதுரந்தானுமே
யேசு நாமத்துக் கொப்பாமோ
வீணை ஓசையிலும் அது
மேலான இனிமை யாமே.

3. பாவிகள் தஞ்சம் அவரே
சீவிதுணையும் அவரே
கூவி யழுவோர்க் காருதல்
கொடுக்கும் யேசு நாமமே.

4. பேசவல்ல நாவு மில்லை
பேச்சுமில்லை விபரிக்க
நேசித்தவரே அறிவார்
யேசுவின் மதுரத்தையே.

24 "கிறிஸ்து ராஜாவின் பேரில்"

இராகம்—சங்கராபரணம்: தாளம்—ஆதி:

1. இராஜனும் சேசுவுக்கு
உரிய பூஜனைகள் புரிந்து
ஒஜனமே பிரஜாஜனமே
இராஜ பதம் பணிமின்.

2. மூவுல காளுகின்ற
கடவுள் சீவியராய்ப் பயின்ற
தேவ குமார னிவர்
எனவே யாவரும் போற்றீடுவீர்.

3. விண்ணுல காசனத்தை—பெயர்த்து
மண்ணுலகில் மனுவாய்
எண்ணிலாத் துன்ப முற்று நன்மையே
நண்ணி நல்லாட்சிப் பெற்றார்.

4. சேசுவின் இராஜரீகம்—அகில
தேசமெலாம் பரம்ப
நேசமுடன் துணிந்து—உழைப்போம்
சேசுவுக்கே ஜெயமே.

25

"தேவராஜ்யம் வருக"

பல்லவி

இராகம்—ஆனந்த பைரவி : தாளம்—ரூபகம்.

உலகமெலாம் ஆளும் ஆண்டவா நாளும் நன்றாக
உலகமெல்லாம் ஆளும் ஆண்டவா.

அநுபல்லவி

பலஜாதி ஜனங்களையும் உன்
னருளினால் சேர் ஒன்றாக.

சரணம்

1. மக்களெல்லோரும் உன்பிள்ளைகள் என்று
சொல்லிக் கொள்ளுதல் போமோ
தக்கவர் உந்தன் உண்மைச் சொரூபத்தைத்
தெளிந்து போற்றல் வேண்டாமோ. (உல)

2. தெய்வமொன்றும் ஓர் தெய்வகுணம் தோற்றத்தில்
மாறுபடுமோ வென்ன ?
வெவ்வேறாய்க் காணினு ஒன்றுக்கொன்று
தோன்றுமோ நேர் விரோதமாக. (உல)

3. உண்மை யென்றால் எல்லோர்க்கும்
ஒன்றல்லாதுனதென தென்றாகுமோ
வெண்மையும் கருமையும் ஒன்றென்றால்
உண்மையும் பொய்யும் ஒன்றென்றாச்சே.
(உல)

26

"கருணைக்கடலேவா"

Venez divin Messie

கருணைக் கடலேவா—கதித்த தயாபராவா
சுருதி மறையோர்க்கு—சுடரொளியேவா.

1. ஆதோனாயி ஆனந்தமே—
ஆவலுடன் காத்திருக்கும்
அடிமைகளை சந்திக்க.

2. எம்மானுவேல் ஏகநாதா—
எங்கள் பாவம் தோஷம் தீர
ஏன் இன்னும் வரத்தாமதம்.

3. பூபதியாம் தாவீதனின்—
பூங்கொடியே பூபதியே
புல்லோர்களை நல்லோர்களாக்க!

4. ஞான மொழி நல்லரசே—
நம்பிக்கையாயண்டி வந்தோம்
வான் வழி காட்டவே.

27

"சுவாமி உந்தன்"

இராகம்—நாட்டை குறிஞ்சி : தாளம்—ஆதி :

பல்லவி

சுவாமி உந்தன் தயை செய்திங்கு
வாராயோ—இந்தத்
தாசர்கள் மேலுள்ள பாசம் அகற்றிட- (சுவாமி)

அநு பல்லவி

பூமியிலே இருள்மேவி அடர்ந்ததினாலே—பல
பொல்லாங் கோடே பவம்
உள்ளே புகுந்ததாலே. (சுவாமி)

சரணங்கள்

1. என்றும் நாம் ஓயாமல் ஏங்கித்தவித்திடலாமோ—,
அடர்
இருளிலே வாடி உன் அருளிலா நிற்பதும் ஆமோ?
அன்று நீ சொன்ன நன்று மொழிப்படி
அடியோர் படுந்துயர் கொடுமையைத் தீர்த்திட. (சு)

2. தீய பிசாசெம் மோடோயாது போர்
செய்யலாமோ—சற்றும்
தீராத வெம்பழியால் உலகாழ்வதும் ஆமோ
தூய உந்தன் திருத்தயை காட்டி எம்
தொல் வினை நீக்கியே நல்வழி சேர்த்திட. (சு)

3. வான மெல்லாமிக மகிழ்ந்தக்களித்தல்
ஏனோ— ஒளிர்
வானவர் கூட்டமாய் ஞானக் கீதம் பாடல் ஏனோ
ஈன மானிடர் வான்கதி சேர்ந்திட
இரட்சகர் கன்னியிடம் மனுவாய் வந்தார்.

28 "கர்த்தர் பிறப்பின் பேரில்"
"வாருங்கள் பக்தரே"
"Adeste fideles"

1. வாருங்கள் பக்தரே-வாம மலேசேர
கோருங்கள் பெத்லேமில் மகிழ் கூர
\+ பாருங்கள் தேவபாலனை கண்ணுர
வாருங்கள் ஆராதிப்போம் (2 தரம்)
வாருங்கள் ஆராதிப்போம் பாலனை... +

2. தேவாதி தேவனார்-திரு பரஞ்சோதி
மூவுலகாளும்-வல்லவநாதி
பாவை மரிபால்-பாலனானாதி. (வாரு+பாரு.)

3. வானவர்களுடன்—மகிழ்ந்தவர் பாட
கானவர் கர்த்தரை—வந்து தேட
ஆனந்தமாக—ஆயர்கள் கொண்டாட. (வா.+பா.)

4. வல்லவர்க்குவான—மண்டலத்தில் துதி
நல் மனதோர்க்கி கத்திலமைதி
புல் மேல் பிறந்தார் புதிதாய்ப் பூபதி. (வா.+பா.)

29

"உதித்தார்"

"Quel bonheur inestimable"

1. உதித்தார் சுதனரிய—ஒளிவிண்மீன் திகழ
மிதித்தார் குணுங்கிரிய—மீட்டார் புவி மகிழ
துதிசெய் வாஞ்சுரர்சூழ—தூய மனத்தோர் வாழ
கதியிவரெனவீழ—கண்டு தொழுவோம் தாழ.

2. வெல்லை மாமலையருகில்—மிகுபனிசாரலில்
புல்லணையின் மீதிரவில்-பொற்பரன் வந்தார்
புவியில். (துதி)

3. ஆயர்கள் சிசுவை நாட அம்பர் மங்களம் பாட
தூயதாய் துகிலால் முட-சூசையன்
மகிழ்ந்தாட. (துதி)

4. இன்று நமக்கதி பாக்கியம்-ஏசுபரன் வந்ததால்
என்று நமக்கதி யோக்கியம்-எம்பரனை
தொழுதால். (துதி)

30

"ஆரிரோ"

இங்கிலீஷ்:

1. ஆரிரா ரிராரோ ஆரிரா ரிராரோ
ஆரி ராரி ராரோ ஆனந்தனே யுரங்காய்.

2. திரித்துவ நாதனே தீன தயாளா—
திரித்துவனே யுரங்காய்.
அல்லலை போக்கியே நல்வரம் தந்தெமை
ஆசீர்புரிந்திடுவாய். (ஆ)

3. சொல்லொண்ணு வல்லமையைப் படைத்த
சுந்திரனே யுரங்காய்
வெல்லலை மலையோரம் வீசும் பனிகுளிர்,
புல்லணை மீதுரங்காய். (ஆ)

4. வானோர்கள் ஸ்தௌத்தியம் பாடிடவே—
வானில் வெள்ளி ஜொலிக்க
வந்துராயர்கள் கண்டு பணிந்திடவே—
புல்லணை மேலுரங்காய். (ஆ)

31

"ஆனந்தமே"

"Plein de ferveur"

1. ஆனந்தமே
திரியேகன் வந்தார்
ஆனந்தமே
ஆனந்தமே } 2 தரம்,
மாணவர் செய் மாதுகடீர
வானவன் புவியில் வர. (ஆனந்)

2. பூ மகிழ
பிரியர் புகழ
வீம மெழ
வெரியெழ } 2 தரம்,
பூவையரின் புண்வளரேனம்
யாவையு நீக்க வேவர. (பூமகி

3. முன்னவனே
பிரசன்ன மானூர்
சின்ன சிசு
வண்ணமாக } 2 தரம்.

விண்ணி னின்று மேடு பெத்தலேமு
மண்ணில் மனுவாய் வந்தவர். (முன்)

32 "திருப்பாடுகளின் பேரில்"

"இரக்கமென்றும்"

இராகம்—உசேனி : தாளம்—ரூபகம்.

1. இரக்க மென்றும் சுரக்கும் திவ்ய
ஏசுநாதா சுவாமி
எளியோர் செய்தபவம் யாவையும்
இரங்கி பொருப் பீரே.

2. திவ்விய பிதா முனிவின் கனந்தீர்த்து
மனுவோர்க்கு
தேவுலகின் வழி காட்டவே
திவ்வியபலியானீர். (இர)

3. யூதாஸ் என்ற கொடுந்துரோகி
உன்னேசம் தயை பாரா
ஆசாரியர் தன்கை உன்னை ஐயோ
காட்டிக் கொடுத்தான். (இர)

4. நீண்ட முள்ளின் முடியதை
நின் தலையில் வைத்து
நினைவால் செய்தபாவத்தால் உந்தன்
நெற்றிவர அடித்தேன். (இர)

5. உடலில் உயிர் இருக்குமட்டும்
உம்மை மறவேன் நான்
உன் பாதமே என் தஞ்சமே
ஊழியன் நான் சுவாமி. (இரா)

33

"ஜெகதலமீடேர"

"I'll sing a hymn to Mary"

1. ஜெகதல மீடேற
ஜெகத்திரட்சகர்
மனுகுல மீடேற
மரமதில் மாய்ந்தார்
வாருங்கள் முத்தமிட
மகிழ் சிலுவையைக்
கூறுங்கள் புகழ்ந்திடக்
குருசில் மாய்ந்தவரை.

2. உயர்ந்த மலைமேலே
உயிர் மரஸ்தம்பம்
சிறந்த கழுமேலே
சீவன் விட்டார் நலம்.

3. நன்றியிலா நமக்கு
நாதன் மரித்துய்ய
அன்றுயிர் விட்டவர்க்கு
ஆராதனை செய்ய.

4. உயிர் தருங் கனியை
உற்பவஞ் செய்திடும்
செயலுருஞ் சிலுவை
சீரடி வாழ்த்திடும்.

34 "ஆளுமேன் கர்த்தாவே"

"God of Mercy and Compassion".

1. ஆளுமென் கர்த்தாவே! யெமை
யாளு நிருபா ஜகத்
தாளு மெய் வல்லாதி மூலா
வாளு மெம்மை நிர்மலா
சரணஞ் சச்சிதாநந்தா
சரண முன் தயவால்
சரண மெமை ரட்சிக்க
மரண மடைந்தவா.

2. ஜெத்சமனி சோலையதில்
பத்து மணிவேளையில்
சற் சனன் முழந்தாளிட்டுத்
தற்பரனை வேண்டினர்
ஆறுத லளிக்குந் தேவ
ரூதலற்று நின்றூர்
தேறுதலில் சீஷர் முகம்
வேறுபட்டுரங்கினர்.

3. செங்கரம் விரித்துச்சுதன்
சென்னி தரையிற் பட
துங்க பிதாவை யிரந்து
துக்கப்ரவாக முற்றூர்
அங்கம் பதரியுதிர
மெங்கும் வேர்வையாய்ச் சோரப்
பங்கர் செய் பாவங்களெண்ணி
யங்கலாய்த்துருகினர்.

4. நாயகன் மரித்துத் தலை
சாயவே மணமிடத்
தூய தேகத்தை யிரக்கி
நேயதாய்க் கடையிடம்
காயங்களைக் கண்டு விம்மி
நோயுர புலம்பினாள்
நேயசீஷர் கூடித்திவ்ய
சேயனை யடக்கினார்.

35

" நித்தமும் "

" Holy God we praise Thy name "

1. நித்தமும் திருச்சிலுவைமேல்
பத்தி மிகுந்த புவியோரே
பத்தர் வழுத்தும் பாவனை போல்
முத்த மிட வாருமைந்தரே !
வாழி சேசு வாழ்குருசே !
வாழி தூநசில் வாழரசே !

2. ஆதன் தீண்டின விருக்ஷத்தால்
அழிந்து லோகங் கெட்டதந்தோ
நாதன் ஏறுங்கின விருக்ஷத்தால்
நன்மை நமக்கு வந்ததன்றோ

3. ஒரு மலையினடுவிலே
உயர்தருவே அன்பதினால்
திரு பரனுன் மடியிலே
சீவன் பிரிய செய்ததினால்

4. வாழிசிலுவை வாழ்மரமே
வாழியுனது மேல் மரித்த
வாழிசேசு பராபரமே
வாழிபவம் பரிகரித்த

36

"மனஸ்தாபத்தின் பேரில்"

"கெட்டுப் போனேம்"

இ-ம்: ஆளுமென் கர்த்தாவே

1. பாடுகள் நீர் பட்டபோது
பாய்ந்து ஓடிய ரத்தம்
கோடிபவம் தீர்த்து மோட்சம்
கொள்ளு விக்க வல்லதே.
கெட்டுப்போனேம் பாவியானேம்
கிருபை செய் நாதனே
மட்டில்லா கருணை எம்மேல்
வைத்திரங்கும் யேசுவே.

2. துஷ்டயூதர் தூணினேடு
தூய கைகள் கட்டியே
கஷ்டமா யடித்தபோது
கான்ற செந்நீர் எந்துணை. (கெட்டு

3. ஐந்து காயத்தால் வடிந்த
அரிய ரத்தத்தினுல்
மிஞ்சும் எங்கள் பவந்தீர்க்க
வேண்டுகின்றேம் யேசுவே. (கெட்டு)

37 " தள்ளிவிட்டால் "

Air : " Jesus My Lord, Behold "

1. தள்ளிவிட்டால் எனக்கார்கதியே
கள்ளனைக் காத்திட்ட வான்பதியே
உள்ள நொந்தே இங்குற்றேனே
முள் முடிதாங்கு அன்பே தற்பரமே. (பொ)
பொறுதி தாரும் யேசுவே
கருணை சேரும் நேசரட்சகரே

2. எந்தன் அன்பால் வருந்தி திரிந்தீர்
உந்தன் ரத்தம் எனக்காய் சொரிந்தீர்
தந்தையே என்மேற் கண்ணோக்கும்
அந் தரித் தேனே வேறார் என்கதியே. (பொ)

3. இன்னல் உற்றேன் கரந்தூக்கு வீரே
மன்னும் தயைவிழி நோக்கு வீரே
கன்னி அன்னை பாலகனே
என்னை ரட்சை செய்குவீர் சற்குருவே. (பொ)

38 " அத்தனே "

" Jesus, the very thought of Thee "

1. அத்தனே என்னுதித்தனே
அன்புரு மும்மது
சித்தங்கடந்தவென்
தீவினை யறுஞ்
சேசு நாயகனே

2, நித்த முமை நினையாமல்
நிந்தைக்காளா னேனே
சித்த மிரங்கு நான்
சீர் பெறவே யென்
சேசு நாயகனே

3. பாவ வழி நீக்கியினி
பவித்திர முடனே
தேவ பணிதனில்
செலுத்துந் திரு
சேசு நாயகனே

4. மாசறவே மாதேவனே
மாபவ மாறவே
தேசுறு முன்பதம்
தேடி யண்டினேன்
சேசு நாயகனே

5. நம்பிக்கை யினுட்டிமறை
ஞான வழி காட்டி
என் பிரானே கறை
ஏற்று வீரருள்
யேசு நாய கனே:

39 "கர்த்தர் உயிர்த்ததின் பேரில்"

அல்லேலூயா Air: "O Filii et filiæ"

அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா

1. மூவுலக ராஜேஸ்வரன்
முடிவில்லா வேகநாதன்
சாவினின்று யிர்த்தெழுந்தார் அல்லேலூயா. (அல்)

2. வாலோரான மானிடரே
மழலை மொழி கன்னியரே
மேலான களி கூருங்கள் அல்லேலூயா. (அல்)

3. ஆதிவாரம் காலை நேரம்
அன்புள்ள சீஷர் கல்லரை
காதல் கொண்டு காணவந்தார் அல்லேலூயா. (அல்)

4, வெண்ணுடையோ டொருதூதன்
வேந்தன் சேசு கலிலேயா
வென்னு நாடு சென்ருரென்ருர் அல்லேலூயா.

5. உள்ளரை யிலெல்லாரின் முன் (அல்)
உங்களுக்கு சமாதானம்
உண்டாகவென மொழிந்தார் அல்லேலூயா. (அல்)

40

பூலோக ரட்சகர்"

"Air : Il est né le divin Enfant"

1. பூலோக ரட்சகர் வந்தார்
பூவனமிசை மரித்துண்மையா
யுலோகாதிப னெழுந்தார்
உயிர்த்தார் மெய்யல்லேலூயா

2. ஆதிவாரம் விடியுங்கால்
அருள் சேசு கல்லரைமேல்
சோதியுட னெழுந்ததால்
சொன்னுர் மக்தலேன் மரிபால். (பூ)

3. சேமித்தவரை திரக்க
சேசு நாயகனுயிர்க்க
நேமிய திரவியக்க
நிலத்தோ ரதிசயிக்க. (பூ)

4. அரியொளி சுடரெழ
அற்புத மேனிதிகழ
மரிமக்தலேன் வந்தழ
மன்னன் தோன்றினுர் மகிழ. (பூ)

5. உயிர்த்த வலு வேலனே
உலக பரிபாலனே
ஜெயவீர செங்கோலனே
திகழ் வளர் நற்சீலனே. (பூ)

41 "கர்த்தர் ஆரோகணத்தின் பேரில்"

"மோட்ச மதிலெழும்"

"J'engageai ma promesse"

1. மோட்ச மதிலெழு மூலாதாரா
மூவுல கோம்பு மென்னுதாரா
மாட்சி யொளி மங்காவலங்காரா
மங்கள மேசு துங்க பரா.

2. இத்தரை யோதி நாளெண்ணைந்து சீர்
இனிய வருளைப் பொழிந்தீர்
முத்தியடை விண்ணக மெழுந்தீர்
மோட்சமேகவே காட்சி தந்தீர்.

3. சுடரெழுஞ் சுரர் சுரம்பாட
சுந்தர வானோர் மகிழ்ந்தாட
அடர்ந்தெழும் வான்கணங்க நீட
ஆனுலகு சேர் மானவனே.

4. உடலு முயிரு மொருமிக்க
வொளி செய்தெழு நாதா மிகக
திடன் கொடு சேவடி துதிக்க
செய்தருளுமென் சேசரசே.

42 "இஸ்பிரீத்து சாந்துவின் பேரில்"

"இஸ்பிரீத்து சாந்துவே."

"Air : Come, Holy Ghost, send down those beams"

இஸ்பிரீத்து சாந்துவே வாரும்—2 தரம்
இருதயங்களில்
இனிய கதிரிட நேரும். (இஸ்)

1. உம்மையல்லாது நாங்கள் பாவ
உலகில் மெய்ந்நெறி நாடோம்
செம்மை வழியறியோம் தேவ—2 தரம்
திரு வருணி வழி
இருந்தெம்மேல் வரம் பொழி. (இஸ்)

2. காரிருள் சேர் தராதலத்தின் மாயம்
கண்ணியிற் சேர்க்கத் தேடுதுபாயம்
பாரினிற் பாவ மணுகாது காரும்
வாரும் சேரும் வரமேழுந்தாரும்—2 தரம் (இஸ்)

3. கற்பியு மெய்ஞ்ஞான மறை யெமக்கு
கட்டளை பத்தனுசரிப்ப தற்கு
சற்சன சீலாதாரு முன்னுதவி
சந்ததம் வாழ உன்றன் பதவி. (இஸ்)

43 "தேவகதிர் வரவிடும்"

Air : " Suivons les rois dans l'étable "

1. தேவகதிர் வரவிடும்
திவ்ய ஸ்ப்ரீத்து சாந்துவே
பாவ மார்க்கம் பழிபுரை
படருலகந் தனில்
ஆவலுடனேவல் செய்து
ஆள வெழுந்தருளும்.

2. பிதா சுதனி னேசமே
பேரொலி செய்யெமக்கு
உதாரமா யுன்றன்வரம்
ஊட்டு மருளைப் பூட்டும்
சதாகால மெம் பாரிசம்
சார்ந்து வதிந்தருளும். } 2 தரம்.

3. பரலோக மெய்ச்சுடரே
பாவிகளைக்கண் ணோக்கும்
நரலோகஞ் சூழிருளை
ஞானவொளியா னீக்கும்
வரமதால் தர்மநெறி
வழுவாதெமைத் தூக்கும் } 2 தரம்.

4. ஊனமா மந்தகரணம்
ஊன்ற புத்தி யறிவு
ஞானம் திடம் விமரிசை
நற்றேவ பக்தி பயம்
தானமாக வந்திரங்கித்
தயை கூர்ந்திரந்தருளும். } 2 தரம்.

44 "தேவஸ்துதிகள்"

1. தேவன் ஸ்துதிக்கப் படுவாராக.
2. அவருடைய பரிசுத்த நாமம்ஸ்துதிக்கப் படுவதாக.
3. மெய்யான தேவனும், மெய்யான மனிதனுமான சேசு கிறீஸ்து ஸ்துதிக்கப் படுவாராக.
4. சேசுவின் நாமம் ஸ்துதிக்கப் படுவதாக.
5. அவருடைய மிக்க அர்ச்சிதமான இருதயம் ஸ்துதிக்கப் படுவதாக.
6. பீடத்தின் மிகவும் பரிசுத்த தேவதிரவிய அனுமானத்தில் சேசு ஸ்துதிக்கப்படுவாராக.
7. தேவனுடைய தாயாகிய மிக்க பரிசுத்த மரியம்மாள் ஸ்துதிக்கப் படுவாளாக.
8. அவளுடைய அர்ச்சியசிஷ்ட மாசில்லாத உற்பவம் ஸ்துதிக்கப் படுவதாக.
9. கன்னியும் தாயுமான மரியம்மாளின் நாமம் ஸ்துதிக்கப் படுவதாக.
10. அவளுடைய மிக்க விரத்தப் பத்தாவாகிய அர்ச: சூசையப்பர் ஸ்துதிக்கப் படுவாராக.
11. தமது சம்மனுசுகளிடத்திலும் அர்ச்சியசிஷ்டவர்களிடத்திலும் தேவன் ஸ்துதிக்கப் படுவாராக.

45 "வானவர் புகழ்ஜோதி."

(இ-ம்.) நாத விந்து கலாதி' (எ. மெ.)

ஆகஸ்ட்—திரு இருதயதூதன்—1940

1. வானவர் புகழ்ஜோதி நமோ நமோ
பானினுடைய ணிபாதம் ,, ,,
யானுன்பதம் வர அருள் ,, ,,
தருவாயே

2. சூர்யனை யணி செல்வி நமோ நமோ
சீர்ய ஞானஞ்சேர் கல்வி ,, ,,
தூய தேவன் புதல்வி ,, ,,
கதி நீயே.

3. அண்டர்கணம் புகழ் தோகை நமோ நமோ
தொண்டர்க் குதவிய ஈகை ,, ,,
தண்டமிழ்க் கிறைவியே ,, ,,
கலை சோதி.

46 "திரியேக கடவுளின் பேரில்"

Air: "Partant pour la Syrie"

1. ஆதியாம் பகாப் பொருளே!
அற்புத திரித்வமே
சோதியே சுடரிருமுச்
சுந்திர லக்ஷணமே
பூதி யத்திலுன் சேடனோர்
புரையுளும் வீழாப்
பாது செய்பரிவா யிந்தப் } 2 தரம்.
பாரிலக்கணமே.

2. ஏக பராபர நேசா
எண்ணிலா வஸ்துவை
வாகுவா யமைத்தளித்த
வல்லசரு வேசா!
சோக நீக்கி யுன் சரணே
துதி செய வரம்
வேகமா யெழுந்தருள் வீர் } 2 தரம்.
விமலா தாளீசா.

47

"பரிசுத்த தேவதாயின் பேரில்"

"அமல ஊரணி"

(இ-ம்.) "சுஜன ஜீவனு" (எ-மெ.)

ஆகஸ்ட்—திரு இருதய தூதன்—1939.

1. அமல ஊரணி அம்மா அருளின் பூரணி
நீயே அமல ஊரணி
நிமல நீதியே நிறை விமல நாயகி 2 தரம்
தனயர் உந்தன் தயை தேடினோம் தரும
ஊரணி தாயே (அமல)

2. ஆதாம் ஏவை பாவம்தீர்த்த அமலனின்தாயே 2தரம்
அன்பர் எங்கள் ஆசைதீர்த்து அருள் புரிவாயே
ஆதர வற்றவர்க்கு ஆதரவு நீ (2 தரம்.)
ஆதிபரன் அருள் சோதி உன் ஆசிதேடினோம்
தாயே (அம)

3. பாவிகளின் தஞ்சம் நீயே பாலர்கண் பாராய் 2 தரம்
பாக்கிய வதியே யுந்தன் பாதம் தேடினோம்
பாரினி லெங்களது பாசம் நீக்கியே 2 தரம்
பக்தர்கள் உன்பணி செய்திட பரனை
வேண்டம்மா தாயே (அம)

48

"வந்தோம்"

Air: "O tendre Mére"

வந்தோம் உன் மைந்தர் கூடி
ஓ மாசில்லாத் தாயே
சந்தோஷமாகப் பாடி
உம் தாள் பணிவோமே.

1. பூலோகம் தோன்று முன்னே
ஓ பூரணத்தாயே
மேலோனின் உள்ளந்தன்னில்
நீ வீற்றிருந்தாயே. (வந்)

2. தூயோர்களாம் எல்லோரும்
நீ தோன்றும் நாளினை.
ஓயாமல் நோக்கிப் பார்த்தே
தம்முள் மகிழ்ந்தாரே. (வந்)

3. வானங்கள் கீதம் பாட
நல் மாந்தர் தேடிட
ஊனம் செய் பாம்பு ஓட (வந்)
நீ உற்பவித்தாயே-

4. நற்றேவ பக்தரான
மெய் நாவலர் சூழ
பற்றோடுன் தோத்ரம் சொல்வர்
நற் பாப்பு மார்களும். (வந்)

5. ராசாதி ராசரோடு
மற்றெத்திறத்தாரும்
தேசாதி தேச மெங்கும்
எத்திக்கும் பாடுமே. (வந்)

49 "காரும் எங்களையே"

Air : " C'est vous, ma bonne Mére "

1. காரும் எங்களையே—காரும் எங்களையே
மாசில்லா மரியே — காருமெங்களையே

2. தேவனை பெற்ற தாயே
பாவிகள் தஞ்சமே
காவல் எங்கட்கு நீரே
காரு மெங்களையே. (கா)

3. நீரே யேசுவின் பின்பு
ஒரே நம்பிக்கையே
பாரும் மோட்சத்தில் நின்று
காரும் எங்களையே. (கா)

4. ஆத்து மங்களை நீரும்
ஆண்டவர் அன்பிலே
காத்திடும் தாயாராமே
காரும் எங்களையே. (கா)

5. யாது தீங்கினி லேயும்
ஆதரவு செய்வீர்
காதல் நிறை மாதாவே
காரும் எங்களையே. (கா)

6. வீட்டைக் காத்திடும் எங்கள்
நாட்டைக் காத்திடுமே
காட்டும் மோட்சம் எல்லார்க்கும்
காரும் எங்களையே. (கா)

50

"யாத்திரிகட்குப்பாதை"

Air: "Ave Maris Stella"

1. யாத்ரி கட்குப் பாதை
காட்டும் தாரகையே
என்றும் கன்னித்தாயே
எம் தஞ்சமே வாழ்க

2. தேவ தூதன் சொன்ன
தேவ வாழ்த்தை ஏற்று
ஏவை பேரை மாற்றும்
சீவ இன்ப மூற்றும்.

3. பாவ இருள் போக்கி
தேவ ஒளியாக்கி
ஆவியின் நோய் தீரும்
சீவ வரந் தாரும்.

4. தாயாய் உம்மைக்காட்டும்
சேயாய் நீரே ஈந்த
யேசு யெம் மன்ருட்டை
நேசமாக யேற்க.

5. தந்தை தேவனுர்க்கும்
மைந்தன் யேசுவுக்கும்
சந்த இஸ்பீரித்தோடு
சந்ததம் வாழ்த்தாமே.

51 "வாழ்த்துவோம்"

இ-ம். இங்கிலீஷ்.

வாழ்த்துவோம், வாழ்த்துவோம் வாழ்த்துவோம்

1. இரட்சகர் திருமாதாவை மாதாவை (2 தரம்)
பட்ச நிறையு மாதாவை
துட்ட பேயை வென்றவரை
மட்டில்லா மகிழ்ச்சியோடு. (வா)

2. எங்கள் யேசை பெற்ற வரை
மங்காத கற்புற்ற வரை
பங்கம் ஒன்றும் அற்றவரை
பொங்கியே மகிழ்ச்சியோடு. (வா)

3. தாயே எமைப்பாது காரும்
பேயின் மாய்கைகளைத் தீரும்
வாயார துதிக்கு எமக்
கோயாத பாக்கியந்தாரும். (வா)

4. நல்ல கிறீஸ்தோர் களாக
எல்லோரும் திரும்பிப் போக
வல்லபம் நிறை மாதாவே
மகனுரிடம் மன்ருடும். (வா)

52

"வானோர்க்கரசி"

1. வானோர்க் கரசி பாதம்
வாழ்த்தி ஸ்துத்யம் சொல்வோம்
ஞான முடனே நித்யம்
நம்பிதுணே செல்வோம்
மரியே நீர் எம் தாயே
நாம் எல்லோர் உம்மக்கள்
என்றும் எம்மையே நீயே
இரங்கிப் பார்ப்பாயே.

2. தாயே என்று வந்தோரை
தள்ளக் கேட்ட தெப்போ
தூய கன்னிமாதாவே
சோதி யணிதாயே (மரியே)

3. பாவப் பிணி சேராமல்
பார்த்துன் தயை கூராய்
சாவு வரும் போதே நீ
தஞ்சமாய் வந்தாளாய் (மரியே)

53

" சர்வநேச மாமரியே "

Air : " Ave mundi Gloria "

1. சர்வ நேச மாமரியே
தயை யுள்ள சுந்தரியே
தஞ்சம் தயாபரியே
வாழ்க வாழ்க மரியே
வாழ்க, வாழ்க மரியே. (2 தரம்)

2. எமக்குரிய தஞ்சமே
எமக்குயிர் சீவனமே
எம் மேன்மை மதுரமே
வாழ்க வாழ்க மரியே. (வாழ்க)

3. பரதேச விப்பூ வோர்கள்
நரரேவை புத்திரர்கள்
சரணமாக வந்தோம்
வாழ்க வாழ்க மரியே. (வாழ்க)

4. இந்தக் கண்ணீர் கணவாயில்
நொந்தழுது உன்னடியில்
வந்துருகி நிற்கின்ருேம்
வாழ்க வாழ்க மரியே. (வாழ்க)

5. அன்புள்ளோர்க்கு தயையுநீர்
துன்பமுற்ருேர் கருணேபேர்
இன்பரசமே என்றும்
வாழ்க வாழ்க மரியே. (வாழ்க)

54 “ நந்தவன செந்தளிரே ”

Air : “ Mystical Rose ”

1. நந்தவன செந்தளிரே
கந்தமணத் தேன்மலரே.
தேன்வள ரோசே (2 தரம்)
யூதேயா நாடதினெழில் தேசே
கோதை மாமரி யெனும் ரோசே.

2. நாயகன் நட்ட ரோசாவே
நளினம் செய் நறும் பூவே (தேன்)

3. தேவாதி தேவன் சோலேயே
தேன் செறி செபமாலேயே. (தேன்)

4. சோதிபரன் தோரணமே
சுந்த்ரபரி பூரணமே. (தேன்)

55 “ நீ யொரு தாயொரு ”

1. நீ யொரு தாயொரு தாதையு நீயுயிர்
நீ யெவையாகிலு நீ
நீய் கனிவார்கடல் நீ யொளியார் சுடர்
நீ யருளார் முகில் நீ.

2. நீ யிறை யோனெழுமாசன நீ நெறி
வேதம் வழாநெறி
நீ முகிழா தநரு மலர் நீ நிறை
நூனிகரா வுரு நீ.

3. எரணியே இதயத்தி லிருந்தெனே
யாளுடையானவளே
சீரணியே மதிவெண்குடையே திரு
மாரிவிடும் புயலே.

4. ஆர்ண்ணியே! கருணைகரியே! யுயிர்
யாவு மளித்தமுதார்
வாரணியே தனிநாயகியே நனி
வாழுதி வாழுதியே.

5. வாழியநந்த தயாபரனுக்குரி
வாய்ந்தருடாயவளே.
வாழி விசும்பிடை வாழியரும்பரின்
வரம விராக்கினியே.

6. வாழி முகிண்டில பூவனைக்கன்னியே
மாதரை யாளசே
வாழியமுந்தருளே மறையே
யறனே! நனி வாழுதியே.

56

"மசபியேலெனும்"

"Lourdes Hymns"

1. மசபியே லெனும்
மலைக் கெபியில்
வாசமான பொந்தில்
வந்து நின்றனள்.
வாழ்க, வாழ்க, வாழ்க மரியே 2 தரம்,

2. வேனிற் பருவத்தில்
மென்மல ரோசா
தேனினிய மலர்
செம்பதஞ் சூழ. (வாழ்க)

3. மாமகந்றம போன்ற
மஞ்சுள வாடை
தோகையனைய முன்
தொங்கவே தோன்ற. (வாழ்க)

4. மண்ணோர் மீதிரங்கும்
மாதா வனைய
அண்ணார்ந்து பரனை
ஆவலாய் வேண்ட. (வாழ்க)

5. லூர்தெனுமா நகர்
ஓங்கி வளர
பேர்பெரும் புண்ணிய
பேர்களும் வாழ. (வாழ்க)

6. மாசில்லாக் கன்னியே
மாதரசே யுன்
தாசரை யிம்மையில்
தாபரித்தாளும். (வாழ்க)

57 ஜெயம் ஜெயம் மரியே!

Air : " C'est le nom de Marie. "

ஜெயம் ஜெயமரியே
ஜெய மங்களமே
ஜெயமே சுந்தரியே
தேநிறை வளமே

" கண்ணிகள் "

1. தயைமரியாள் என்ற
சந்தப் பெயரிதே
நயம் பொழியாநின்ற
நல்வாரண மிதே (ஜெய)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 MAR 1941
MADRAS

2. அன்னை கன்னிவனிதை
அருண் மரிபெற்ற
உன்னத நாமமதை
உலகமே போற்ற. (ஜெய)

3. எண்ணிலா வரத்தாலே
இலங்குங் கன்னியின்
வண்ணப்பெயரதாலே
வரம் பெருகுமாம். (ஜெய)

4. மரியின் திருநாமம்
மாந்தரின் களிப்பே
எரிபேய் கட்குவீமம்
எழுங் கொந்தளிப்பே. (ஜெய)

58 "பாக்கிய வானோர்கட்கு"

(இராகம்: ஞான கீர்த்தனையில் காண்க)

1. பாக்கிய வானோர்கட்கு
யோக்கிய ராணியே!
எக்கமுள்ள பாவிமேல்
நோக்கு முன்றயவால்.

"பல்லவி"

என்னுயிர் கெடுக்கப்பேய்
வன்மை செய்யுதம்மா
நின் பதத்தை யண்டினுல்
தின்மை தீருமம்மா

2. எத்துந் துஷ்டப்பசாசால்
பற்றுற்று விழுந்தால்
குத்துண்ட வென்னுதரைத்
தத்தங் கேளுமாயே. (என்)

3. முண்முடி சூட்டப்பட்ட
உன்மகனை நோக்கி
கண்கலங்கு மெனக்கே
நின்றுதவி கேளும். (என்)

4. வாழுங் கன்னிகையோர்க்கு
சூழுஞ் செஞ்சுடரே
ஊழியுள்ள காலம் நீ
டூழிவாழ வேண்டும். (என்)

59 "மகிமையிலிலங்தும்"

Air : "Sweet Mother we implore thee"

1. மகிமையி லிலங்கும்
மாசுந்த்ர மரியே
மகிதல மாதருள்
மாட்சியானவளே
அகிலாண்ட நாயகி
அண்டினே முன்பாதத்தை
மகனரிட மெங்கட்காய்
மன்ருடும் நாளுமே

2. சேணோரின் நறும் பூவே
பாரோர் சொல் ராணியே
பானுடை பூண்ட தாயே
பாவிகள் தஞ்சமே
வேணு முன்னுசீர் நாளும்
வேந்தன் றவீ துசேயே
தானுன தேவன் தாயே
தாசர்க்காய் மன்ருடும்.

3. தண்ணூர்ந்த கடலதின்
தாரகை யானவளே
மண்ணவர் நன்னிதியே
வானவர் கிரீடமே
வண்ண முத்தியொளியே
வல்லவர் தாய் மணியே
அண்டும் பாவிகளெம்மை
ஆண்டருள் புரிவாய்.

60

"பிறந்தது மே மாதம்"

Air : "Cest le mois de Marie"

பிறந்தது மே மாதம்
ப்ரிய தாய் மரியின்
பெரும் புகழ் மகிமை
பெருக வாழ்த்துவோம்.

1 தேவதூதர் மகிழ
திவ்ய சோதியெழுந்
தேவதாயைப் புகழ
சீர்பொருந்திய நாள் (பிற)

2 ஜென்மபாவ மணுகாத்
திவ்ய நாயகியே!
மின்னு மொளிநிகரா
மேன்மை பிரகாசியே (பிற)

3 மீனின் முடிதரித்து
மின்னி வாழ்பவளே
வானினிய விடத்து
வரஞ் சூழ்பவளே (பிற)

4 பிறந்த விந்தமாதம்
ப்ரிய ஜனங்களே
சிறந்த மரிதாயை
இரந்து வேண்டுவோம் (பிற)

61

"உத்தரிகங் கை நீண்ட"

Air: "Vers l'autel de Marie."

1. உத்தரீகங்கை நீண்ட
சுத்த கன்னிகையே
வித்தகி என்னமல
உத்தமோத் தமியே

சத்ய தத்வ சுத்தமரி
நித்த மெத்த தத்தம்புரி
உத்தரீக தயாபரி

2. வஞ்சமிஞ்சு மென்றுன்ப
மல்கலான் மெலிந்தேன்
மஞ்சனைய பேரின்ப
வரம்பெற வந்தேன். (சத்ய)

3. போரதி லொருவீரன்
பூண்ட வுத்தரிய
வீரவலுவாற் சூரன்
வீயாதுயிர் செய (சத்ய)

62

" அரிய சேசுபரனே "

Air : " This is the image of our Queen."

1. அரிய சேசுபரனே
அன்புட னீன்றெடுத்த
பிரியதத்த நிறைகெம்
பீரியே! விண் வாரியே

அரிய நேயகனியின்
அருணிறை மணியே
திருமணி கரமேந்தும்
செபமாலை மாதாவே. (அரிய)

2. சேவித்தென்னாளு முமது
சீரடி வாழ்த்துமிந்தப்
பாவிகட்கநு தினம்
பரிந்து மன்றாடிடும். (அரிய)

3. ஜெபமணியைத் தெளிந்து
செய்கவென மொழிந்து
தபசாமிநாதர் கரம்
தந்ததுரந்தரியே. (அரிய)

4. பதிதர் மத சங்காரி
பானுடையின் சிங்காரி
உதிக்குமீன லங்காரி
உலகோர்க் குபகாரி. (அரிய)

63 "வானவர்களாண்டவளே"

Air : "Salve, Regina Coelitum."

வானவர்க ளாண்டவளே !
வல்லமரியே
மானவரைக் காப்பவளே !
அல்லேலூயா

வானவர்கள் சாற்றிடும்
மானவர்கள் போற்றிடும்
வாழ்க வாழ்க வாழ்க மரியே

தேவ பிதா புத்திரியே !
தேவகன்னியே
நல்லவருக்குக் காவலே !
அல்லேலூயா. (வான)

திருச்சுதனின் தாயே
க்ருபை மரியே
பெருங்கடல் திடமீனே
அல்லே லூயா. (வான)

காலையினொளியுடுவே
மாலை மதியே
வேலையில் திடவோடமே
அல்லேலூயா. (வான)

64

"சீவ கருணாலயனால்"

Air : " Angels we have heard on high"

1. சீவ கருணாலயனால்
சேயை மரியம்மாள் புடை
தேவ தூதன் காபிரியேல்
செப்பினர் சிறந்தாசிடை.

வாழ்க கர்த்தர் உம்மகமே
வாழ்க கற்பக்கனியிகமே.

2. ப்ரிய தத்த நிறைமரி
பேர் புகழ் மா சுந்தரியே !
திருப்பிதா அன்பு புரி
சேசுபரன் உம்முடனே. (வாழ்க)

3. பாவையர்களுட் சிறந்த
பகரிலா பாக்கிய முற்றீர்
தேவ கரத்தா னிறைந்த
செறியாசீர் வாதம் பெற்றீர். (வாழ்க)

4. உமது திருக்கருவின்
உகந்தக் கனியானவர்
அமலனுஞ் சேசுநாதன்
ஆசீர் வதிக்கப்பட்டவர். (வாழ்க)

5. பாவிகட்காயிங் நேரமும்
பரிந்தெமக் காயன்போடும்
சாவின் கொடுமை நேரமும்
சர்வேசுரனை மன்றாடும். (வாழ்க)

65 "மங்களஞ் சிருங்கார"

இ—ம் : ஞான கீர்த்தனத்தில் காண்க :

மங்களஞ்சி ருங்கார
மரிதாய்க்குமா மங்களம்
சங்கை மோட்ச லங்கார
சன்மரிக்கே மெய் மங்களம்.

மங்களமே நேச
மரியன்னை ராச
வங்கிஷத்தின் பாச
மலர் வாசமே.
வாருங்கள் மைந்தரே சேர
மாமரிக்கே துதிக்கூற,

மங்கள மோட்சமதில்
மரியம்மாள் விண்ணகத்தில்
மங்கள மோட்சமதில்
மகுடஞ் சூட்டப்பட்டதால். (மங்க)

அன்னையே! அருணையே!
ஆதி பிதா வருட்சேயே!
கன்னியர் கன்னிகையே
கருணையின் பூரணியே. (மங்க)

66 "பாவிகளுக்கு அடைக்கலமே"

1. பாவிகளுக்கு அடைக்கலமே
பாவிகள் மனந்திரும்ப வேண்டிக்கொள்ளும்

2. பாவிகளுக்கு அடைக்கலமே அஞ்ஞானிகள்,
பதிதர், பொல்லாத கிறீஸ்தவர்கள் மனந்திரும்ப
வேண்டிக் கொள்ளும்.

3. பாவிகளுக்கு அடைக்கலமே
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

4. மரியாயின் மாசற்ற இருதயமே
இந்தியா மனந்திரும்ப வேண்டிக்கொள்ளும்.

67 "பிரார்த்தனை"

1. சுவாமி ! கிருபையாயிரும்
கிறீஸ்துவே கிருபையாயிரும்
கிறீஸ்துவே பிரார்த்தனையைக் கேளும்
கிறீஸ்துவே நன்றாகக் கேளும்.

2. பரத்தைப் படைத்த பிதா சர்வேசுரா !
உலகத்தை ரட்சித்த சுதன் சர்வேசுரா !
இஸ்பிரீத்து சாந்து சர்வேசுரா !
எங்கள் மேல் தயை பண்ணிரட்சியும்.

3. பிதா சுதனிஸ்பிரீத்து சாந்து தற்பரா
மூவருமொன்றான சர்வேசுரா
அர்ச்சிய திரியேக சர்வேசுரா
எங்கள் மேல் தயை பண்ணிரட்சியும்.

4. அர்ச்சிய சிஷ்ட மரியாயே
சர்வேசுரன் அர்ச்சிய மாதாவே
கன்னியரில் நல்ல கன்னிகையே
எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

5. கிறீஸ்துவினுடைய மாதாவே
தேவப்ர சாதத்தின் மாதாவே
மகா பரிசுத்த மாதாவே. (எங்)

6. அத்தியந்த விரத்த மாதாவே
பழுதில்லாக் கன்னி மாதாவே
கன்னி சுத்தங்கெடாத மாதாவே. (எங்)

7. அன்புக்குப் பாத்திர மாதாவே
ஆச்சரியமுள்ள மாதாவே
நல்லாலோசனை மாதாவே. (எங்)

8. சிஷ்டிகருடைய மாதாவே
இரட்சகருடைய மாதாவே
மகா புத்தியுள்ள கன்னிகையே. (எங்)

9. வணக்கத்துக் குரிய கன்னிகையே
பிரகாசமான கன்னிகையே
சத்தியுடைத்தான கன்னிகையே. (எங்)

10. தயை பொருந்திய கன்னிகையே
விசுவாசியான கன்னிகையே
தருமத்தின் கண்ணாடியே. (எங்)

11. ஞானத்தினிருப் பிடமே
எங்கள் சந்தோஷத்தின் காரணமே
ஞானத்துக்குரிய பாத்திரமே. (எங்)

12. மகிமைக்குரிய பாத்திரமே
மாபத்தி யுடைத்தான பாத்திரமே
தேவ ரகசிய ரோசாப் பூவே. (எங்)

13. தாவீதி ராசனுப்பரிகையே
தந்த மயமான உப்பரிகையே
சொர்ன மயமான ஆலயமே. (எங்)

14. வாக்குத் தத்தத்தின் பெட்டகமே
பரலோகத்தின் வாசலே
விடியற்கால நட்சத்திரமே. (எங்)

15 வியாதியஸ்தருக் காரோக்கியமே
பாவிகளுக் கடைக்கலமே
கஸ்திப் படுவோரின் தேற்றரவே. (எங்)

16. கிறீஸ்துவர்களின் சகாயமே
சம்மனசுகளின் ராக்கினியே
பிதாப் பிதாக்களின் ராக்கினியே. (எங்)

17. தீர்க்க தரிசிகள் ராக்கினியே
அப்போஸ் தலர்களின் ராக்கினியே
வேத சாட்சிகளின் ராக்கினியே. (எங்)

18. ஸ்துதியருடைய ராக்கினியே
கன்னியாஸ்திரிகளின் ராக்கினியே
அர்ச்சிய சிஷ்டவரின் ராக்கினியே. (எங்)

19. ஜென்ம பாவமில்லா ராக்கினியே
திருச் செபமாலை ராக்கினியே
சமாதானத்தின் ராக்கினியே.

20. உலக பாவங்களைப் போக்கும்
சர்வேசுரனுடைய செம்மறிப்
புருவை யாகிய சேசுவே. } மூன்றுதரம்

1. எங்களின் பாவங்களை போக்கும்.
2. எங்கள் பிரார்த்தனையைக் கேளும்.
3. எங்கள் மேல் தயை பண்ணிரட்சியும்.

68 "திருமகனறை யுண்ட"

Air : "Stabat Mater."

1. திருமகனறை யுண்ட
சிலுவையடியில் நின்ற
தேவதாய் நொந்தழுதாள்.

தேவதாயே ! தயைசெய்து
சிறியேனுளத்தில் மிகச்
சேசுகாயம் பதியும்.

2. வேதனைக் கடலமிழ்ந்த
மாதா ஆத்துமம வதைய
கேத வாளுருவிற்று. (தேவ)

3. தனிமகனை யிழந்த
தாயனுபவித்த துயர்
தானுரைக்க நாவுண்டோ ? (தேவ)

4. படியில் தானீன்ற சுதன்
படும் வாதை கண்டிளகி
நடுங்கிப் புலம்பினுள். (தேவ)

5. இரட்சகர் திருத் தாயார்
இக்கொடிய வாதைப்பட
யார் கண்டழாதிருப்பார்.? (தேவ)

6. திருமகன் துயரத்தால்
உருகுந் தாயைக் கண்டுள்ளங்
கரையாதாரு முண்டோ? (தேவ)

7. நேசதஞ்சன பாவத்தால்
நீசநிந்தை யடிப்பட்டுச்
சேசு வதையக் கண்டாள். (தேவ)

8. அன்புள்ள தன் திருமகன்
துன்ப துயரவஸ்தையுள்
தன் சீவன் தரக்கண்டாள். (தேவ)

9. பட்சவூரணி மாதாவே
பரிதாபந் தந்தும்மோடு
பாவிநானழச் செய்யும். (தேவ)

10. ஆதிசேசுவை நேசித்தே
யானவர்க் கினியனுக
அன்பாலென் னுள்ளஞ்சுடும். (தேவ)

11. எனக்கும் மகனுறங்கி
யிடர் பட்ட பாடுகளில்
யான் பங்கடையச் செய்யும். (தேவ)

12. உயிருள்ளதனையு நான்
உருகிச் சேசுபாடெண்ணி
உம்முடனழச் செய்யும். (தேவ)

13. சிலுவை யடியினின்றும்
புலம்பலின் பங்கடைய
வலிய ஆசிக்கின்றேன். (தேவ)

14. மண்ணுடலுயிர் பிரிந்தால்
வான் மோட்சத்தாத்துமஞ் சேர்ந்து
வாழவுஞ் செய்தருளும். (தேவ)

69

அர்ச் : சூசையப்பர் பேரில்
“சூசை மாணிறையோனே”

(இராகம் : ஞானக் கீர்த்தனத்தில் காண்க.)

1. சூசைமா ணிறையோனே
சுந்திரவொளி யெழுஞ்
சொர்ணமய முள்ளோனே
சூசை மா ணிறையோனே
தாவீததிபன் குடியோனே
தார் முடியணிந்த
தாய்மரி பணிந்த
சந்த மிகுந்த
சற்சன பிரியோனே!
மேவியே யுன்றன்
மின் சரண் வந்தேன்
விமலனே வேண்டுமேலோனே.!

2. திருமரி பூ மானே !
தேவ பாலனைத்
தேற்றியா தரித்தோனே
சிறந்த வரத் தோனே
நித்தனை யேந்தி யுவந்தோனே
நித்யம் புயத்திட
நேத்ரம் வியந்திட
நேய முத்திட
நிறை கூர் வரத்தோனே !
பத்மனே ! முகம்
பாரெனை நிதம்
பாரிலெனைப் பாது செய்வோனே. !

70

"மது மலர்"

(இ-ம் : கமாஸ். தா-ம் : ஆதி).

1. மதுமலர் நிறைக்கொடி கையிலேந்தும்
மாட்சிமை நிறை சூசைமாமுனியே (ஓ)
ஸ்துதிவளர் உமது நற்பதம் வந்தோம்
துணைசெய்து எம்மையாளும் தாதையரே.

2. வான் உலகிழந்ததால் கர்வ முற்ற
வன்மனக் கூளியின் வலையறுக்க (ஓ)
தான் மனுவாயுதித்த கடவுள்
தாதையாம் சூசையுன் தஞ்சம் வந்தோம்.

3. ஒளி நிறை கதிரோனை ஆடையெனும்
உடுவதைத் தலையிலும் முடிபுனைந்த (ஓ)
துளி நிகர் அருள் பொழி மாமரியாள்
துணைவனாம் சூசையுன் துணைபுரிவாய்

4. வாழி கடவுள் கைத் தாதையரே
வாழி மதுமலர்க் கொடியோனே (ஓ)
வாழி இவ்வூரின் நற்காவலனே
வாழி என்றென்று நாம் வாழி சொல்வோம்.

71 "நீ தயை கூர்ந்தெமக் கீய் முனி"

(இ-ம் : மோகனம். தாளம் : ஆதி

பல்லவி

நீ தயைகூர்ந் தெமக்கீய்முனி

அநுபல்லவி

நீ தயை கூர்ந் தெமக்கீய் முனி
சூசையே சீர் அனுகூலமே (நீ தயை)

சரணங்கள்.

1. திவ்ய சுதன் தன்னைவளர் தாதையே
பூங்கோல் நிழல் கீழ்
இவ்வேளை உன் தயை
எவ்விதமும் அருள்நீயே (நீ தயை)

2. அன்னைமரி கன்னிமை கார்
தூதன் நீ மேலாம் அருளார்
எந்நேரமும் எம்மை தீமை
அற நித்தம் பாராய் (நீ தயை)

3. தஞ்சம் நீ என்றுன்னைத்தேடி
வந்தோமே இதுவே தருணம்
எஞ்சாத உன் தயை கொஞ்ச
மேனும் இன்று தாராய் (நீ தயை)

4. இந்த வீடு சொந்தம் உனதல்லவோ
யாரோ அறியார்
தந்தாயே பார்த்திடாய் வந்தோம்
உந்தன் தஞ்சமென. (நீ தயை)

72 அர்ச்சிய சிஷ்டவர்கள் பேரில்.

"பாது காத்தருள் புரிவாய்" Air: "English."

1. பாது காத்தருள் புரிவாய் நீயே
பதுவை பதியந்தோனி
பாவிகட் கிரங்கியே
பாசமொழித் தாதரிப்பாய் இவ்வேளையே.

2. மாபெறு மிஸ்பானியாகண்
மடுத்தீன் தவ சேயனுய்
மானிலத்தே யுதித்த மாதவனும்
ஏசுவை துதித்தாய் நீயே. (பாது)

3. கூன் குருடு குஷ்டரோகிகள்
கூக்குரலிடும் சப்பாணி
வான்பரனை யேந்தியே
வாதையாவும் தீர்த்திட்ட
சந்தந்தோனியே. (பாது)

4. பாரில்வளர் மேவுங் கிறீஸ்து
பரன் சபை யோர்கட்கும்
கோரிடும் மிப்பாலர்க்குன்னுசீரை
என்றுங் கொடுத்தாள்வாய் முனியே (பாது)

5 நேர்ச்சியாக நினைந்தும்மை
நாடும் பதிதரஞ்ஞானி
நாஸ்திகர் யாவர்க்குன் புதுமை
காட்டி நாதன் மறைசேர்க்க தோத்ரம்.

73

“வேறு”

Air : “English”

1. சந்தமாமுத லோனுக்குரிய
தவவுடை தரித்தவரே
கந்தமெழும் புண்ணியம் புரிய
காட்சியுற்ற மாமுனிவரே. (அந்த)

2. அந்த சவுந்த்ர அந்த சவுந்த்ர
அந்த கவுந்த்ர
வந்தோணி யாரே. } *bis.* 2 தரம்
மண்ணை நாடாது மானவர்க்கேற்ற
வால வயதில் மண்டுறக்க
விண்ணை நாடி விண்ணோருமைப் போற்ற
மெய்த்துறவியாம் விண்டிறக்க (அந்த)

3. மெய்ம்மறை யோதி விண்ணெறி காட்டி
வேத வமுதூட்டினவரே
தெய்வபாலனை யேந்திச் சீராட்டி
சேவித் தன்புகாட்டினவரே. (அந்த)

4. கண்ணிற்காணுப் புதையும் பொருளை
கண்டடைந்திடச் செய்பவரே
எண்ணிலாவலு தேவனருளை
இரந்தீ வீர் போதனரே. (அந்த)

5. துய்யனே எம்முன்னெறிச் சாரம்
துலங்கப்பெறத் தூய்மணியே
வையகத்தி லெமக்குபகாரம்
வந்து செய்குவீர் மாமுனியே (அந்த)

74

"அர்ச்: செபஸ்தியார்"

Air: "Des èlus èternelle Patrie."

1. உத்தம வங்கிஷத்தில் பூத்த
சுத்தவீர செபஸ்தியாரே
நித்தமுமை நினைந்து வேண்டினோம்
உத்தமரா யுய்ய மன்றாடும்

Chorus.
இத்தாலிய நாடதினெழில் மணியே
எத்திக்கும் கமழும் நறும் பூவே
நத்துமாசத்ய மறை மன்றாணே
சுத்த செபஸ்தியாரே வாழ்க.

மண்ணிரைவர்க் கஞ்சாமல் நீரே
வண்மையுடன் ஞான மூட்டினீர்
எண்ணிலா வற்புதம் புரிந்து
திண்ண விசுவாசம் நட்டினீர். (இத்)

3. இத்தரை மாந்தர்க ளெம்ககாய்
சேசுவை பூவிலே வேண்டியே
ஆத்தும மெய்சுகங் கனிந்தருள
அன்பாக வண்டினோ முன்பாதம். (இத்)

75 "லீசியோ நாட்டின்"

Air : " Hail Queen of Heaven "

1. லீசியோ நாட்டின் லீலியே
   இன்ப சேசுவின் நேசியே
காசினியோர்க் கன்பன்னையே
   காருண்ய ஞான மிர்தமே
பூசிக்கு முன்னடியாரைப்
   பூமிசையே நாளும் காருமே.

2. கார்சூழ் பொய்யுலகை நீத்து
   கர்த்தனுக்கே கனிந்துழைக்க
கார்மேலென்னும் சபையிற் சேர்ந்து
   கற்பிலுயர்ந்த தெரேசாளே
சீர்பெரவே சேயர்கட்காய்
   சேசுவிடம் நாளும் மன்றாடும்.

3. எத்திக்கும் புகழ் தெரேசாளே
   எங்குந் தநயர்க் கொடையாளே
தித்திக்கு முன் வழிபற்ற
   தேடியெமக்கருள் செய்வீர்
நித்தியமும் நேசம் வைத்து
   நீசர்கட்காய் நாளும் மன்றாடும்.

76 அர்ச்: பிலோமீனம்மாள் பேரில்.

"இங்லீஷ் ராகம்"

1. நற்புகழ் பாடிடுவோர்க்கு
நலனருட் சீலியே
அற்புதம் செய்யனுக்கூலி
அரசக் குல மணியே

பல்லவி

உலகம் சரீரம் பசாசால்
கலங்கினோம் கன்னியர் தூய
திலகமே பிலோ மினம்மாளே
திருவருள் வேண்டம்மா

2. கன்னிமை திருமணம் வீச
ககனத்தில் உல்லாச
உன்னத பரனிடம்
உறிமையி லருளம்மா

3. கொற்றவன் பெருமையை யெள்ளி
பெற்றோர் உரைத் தள்ளி
வெற்றியால் விமலன் பால் சேர்ந்து
விருதணி பூஷணமே.

77 "சிந்தரசின் மாமகிழ்"

Air : " Divin Coeur De Marie'

1. சிந்தரசின் மா மகிழ்
சிறந்த குருவே
விந்தை மெய்ம் மறை புகழ்
வேதாந்த திருவே
சவேரியாரே சீவ
தற்பரனே வேண்டும்
நவமணியே தேவ
நாதனே மன்றூடும் } *bis.*

2. துர்ப்பசாசின் கோலத்தை
துரத்து மோனரே } *bis.*
சற்குருவி நாமத்தை
சாற்றும் விற்பனரே
எங்கள் விசுவாசத்தின்
எக்காளச் சத்தமே
துங்கசேசு கணத்தின்
தூய் பரிசுத்தமே. } *bis.*

3. மெய் யாராதனேக்காக்க
மேலான போதரே
பொய்யாராதனே நீக்க
புண்ணிய நீதரே
சவேரியாரே சிந்து
ஜனந்தனேப் பாரும்
தவஞ்செய வுகந்து
தயவு கண்கூரும்.

78

"உத்தரிக்கும் எங்கள்"

(இ-ம். இ. தூதன். நவம்பர் 1939)

பல்லவி

உத்தரிக்கும் எங்கள் உத்தம நேயர்க்கு,
நித்திய பாக்கியம் ஈந்திடுவீர்

சரணங்கள்

1. தீயின் கொடுமையால் தேம்பி அழுகிறார்
தேற்றுவாய் நாதனே தீர்த்து அவர்துயர்
2. காருண்ய தேவாநின் காட்சி யடையாத
சேயராம் மக்கட்கு சொர்க்கம் அளித்திடாய்
3. தாயில்லா பிள்ளைப்போல் தத்தளிப்போரை நீ
நேயமுடன் தூக்கி நின்வீடு சேர்த்திடாய்
4. மானிடர் தஞ்சமே மாசில்லா மாமரி
மாய்ந்திடும் மாந்தர்க்காய் மாபரனை வேண்டும்

79

பொதுப் பாட்டுகள்

"வானவர் தேவனே"

Air : " Faith of Our Fathers "

1. வானவர்களின் தேவனே
வற்றாக்கிருபை ஊரணியே
தேனார்ந்த உன்னை சமதை
தேடுமுன் மைந்தர்க்குத் தாருமே
வானவர்க்ளின் தேவனே
வந்தித்தோ முன் பொற்கழலை 2 தரம்

2. நீச நன்றியில் மானிடர்க்காய்
நேசத்தால் உம்மிரத்தத்தை
பாசத்தால் சொரிந்தநல் சேசுவே
பாரோர் மகிமைபதம் சேர. (வான)

3. நித்திய நம்பிக்கை யினகமே
நித்திய தண்ணருளினூற்றே
நித்தம் பாவி யெமை நினைந்து
நித்ய முத்திவர மருள (வான)

4. சர்வ லோகத்தின் காரணு
சற்சனரின் நம்பிக்கையே
கற்பனையாம் நின்படி செல்ல
கர்த்தாவே திட மதை தாரும். (வான)

80

"உன்னதனின் மகிமை"

"Air: We stand for God."

1. உன்னதனின் மகிமையை நாம்
ஓர்ந்தெந்நாளும் புகழ்வோமே
துன்மன பேயின் தூர்த்தர்க் கெதிரே
துங்கவனை துதிப்போமே.

பேரிறக்கம் நிறை தேவனே
பேயின் தந்த்ரமதிலே
சிரியே மெம் விசுவாசத்தை
சிதராமல் காத்தாள் வீரே
பேரின்ப மாம்மா மோட்சபாக்ய
பேரதனை யருள்வீரே

2. நீசர்கட்காய் நிர்மல தேவன்
நித்யபலியான துன்னி
வாசமுடன் சேசு ஆசியால்
பாரில் சுத்தராய் திகழ்வோமே. (பேர்)

3. நம்மி னெல்லா வினைகள் யாவும்
நல்ல சேசு பாதம் சேர்ப்போம்
அம்பொற் பாதத்தை அண்டிசீர் தேடி
ஆண்டவர் பின் செல்வோம் நாமே. (பேர்)

81

"என்னோடிரும்"

Air: "Abide with me"

1. என்னோடிரு நேச ஆண்டவரே
வெளிச்சமங்கி இருள் சூழ்ந்ததே
மற்றோர் சகாயம் அற்றபோதிலும்
நீங்கா சகாயம் நீர் என்னோடிரும்.

2. நீர்மேல் குமிழிபோல் என் ஆயுளும்
இம்மையின் இன்பம் வாழ்வும் போகும்
சூழ்ந்துள்ள யாவும் மாறி வாடிடும்
மாறாத தேவன் நீர் என்னோடிரும்.

3. நீர் கூட நின்று அருள்புரியும்
பசாசின் வலைக்கு நான் தப்பவும
நீர் என் துணையும் தஞ்சமா இரும்
இக்கட்டிலெல்லாம் நீர் என்னோடிரும்.

4. நான் சாகும் அந்தகாரத்தில்
உம் சிலுவையை காட்டும் சாகையில்
விண்ஜோதி வீசி மருள் நீக்கிடும்
வாழ்விலும் சாவிலும் என்னோடிரும்.

82

"உம்மண்டை தேவனே"

Air : "Nearer my God to Thee."

1. மென்மேலும் உம்மண்டை என்னை இழும்
சிலுவை வழியாய் சேர்த்துக்கொண்டும்
எந்தன் அவா ஒன்றே உம்மண்டை தேவனே
உம்மண்டை தேவனே சேருவதே.

2. தாசன் யாக்கோபை போல் இராக்காலத்தில்
திக்கற்று கல்மேல் யான் தங்குகையில்
எந்தன் கனவிலே—உம்மண்டை தேவனே
உம்மண்டை தேவனே சேருவதே.

3. நீரே நடத்திடும் பாதை எல்லாம்
விண் எட்டும் ஏணிபோல் விளங்குமாம்
தூதன் அழைப்பாரே உம்மண்டை தேவனே
உம்மண்டை தேவனே சேருவதே.

4. நான் விழித்தும்மையே ஸ்தோத்தரிப்பேன்
என் துயர் கல்லை உம் வீடாக்குவேன்
என் துன்பத்தாலுமே உம்மண்டை தேவனே
உம்மண்டை தேவனே சேருவதே.

83 திருமணப் பாட்டுகள்

" அபிராமின் கர்த்தரே "

Air : " Venez, troupe angélique."

1. அபிராமின் கர்த்தரே
ஈசாக்கின் கர்த்தரே
ஜாக்கோபுவின் கர்த்தரே
சன்மணம் புரியும்
மணவாளன் றனையும்
Chorus மணவாளியையும்
அன்பாய் வாழவுமது
இன்பா சீரளியும்.

2. மெய்யான மணமாதல்
மிக்க பரிசுத்தம்
துய்யவுன் கரமதால்
தூய்வரமடைய

3. பாரிலிவ் விருவரும்
பற்றுதலுள்ளராய்
பேரறத்தில் முயன்று
பெருகி வாழவே.

84 " இன்று செம்மலர் சூடி "

(இ-ம். சங்கராபரணம்).

பல்லவி

இன்று செம்மலர்சூடி—மெத்த
இங்கித மாகத்திரு
மன்றல் செய்மணவருக்கே சுபசோபன
மங்கள மங்களமே.

1. ஆரிய பகாப் பொருளே !—ஆண்டு
அதமேவைக் காதியிலே
சீரிய சிங்கார வனமதின் மணஞ்சிறந்திடத்
திருவர மளித்தவரே. (இன்னு)

2. நிதி சருவேஸ்வரனே ! எங்கள்
நிமல பராபரனே
அதிதயை கொடுமண வாளரை யிகந்தனில்
ஆசிரளித்தருளே. (இன்னு)

3. புவியதில் பல்லாண்டு—செல்வப்
புத்ர சந்தானமொடு
சவிதளிர்விடு நறுமணமரை நிகரிவர்
தழைத்திட வருள்பரனே. (இன்னு)

மோட்சம்

85 மனமே மனமே மனமே. இ-ம் : பிரான்ஸ்

பல்லவி

மனமே மனமே மனமே உன் வீடேவான்

சரணங்கள்.

1. மனமே உன் வீடேவான் அதிலே நீ சேரவே
உனதாவலோடு தேடிடுவாயே நாள்தோரும். (மன)

2. மனமே உன்வீடேவான் மலைபோல துயர்வந்தால்
நினைவாலே மோட்சத்தை நினைத்தாலெல்லாம்
நீங்கும் (மன)

3. மனமே உன்வீடேவான் அதில் சேரல்பாடல்ல
தினமும் வருந்தினல் ஜெயங்கொண்டு
சேருவாய் (மன)

4. மனமே உன்வீடேவான் மறுலோகஞ் சொற்பமோ
இனம் யாவும் விட்டாலும் இதில் சேரல்
லாபமோ (மன)

"ஜேபமாலே"

ஜேபம்

துவக்குகிற வகையாவது.

" விசுவாசமந்திரம். ஒரு : பா. 3 பிரி. ஒரு : திரி. ஒரு: பர

சொல்லவும் :

86 சந்தோஷ தேவரகசியம்.

1-வது கபிரியேல் சம்மனசு தேவமாதாவுக்கு மங்கள வார்த்தை சொன்னதை தியானிப்போமாக.

2-வது தேவமாதா எலிசபெத்தம்மாளே மினவினதை தியானிப்போமாக.

3-வது கர்த்தர் பிறந்ததை தியானிப்போமாக.

4-வது சேசுநாதர் சுவாமி கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்டதை தியானிப்போமாக.

5-வது பன்னிரண்டு வயதில் காணமற்போன கர்த்தரைக் கண்டடைநததை தியானிப்போமாக.

87 துக்க தேவரகசியம்

1-வது சேசுநாதர் பூங்காவனத்தில் இரத்தவேர்வை வேர்த்ததை தியானிப்போமாக.

2-வது கர்த்தர் கற்றூணில் கட்டுண்டு அடிபட்டதை தியானிப்போமாக.

3-வது சேசுநாதர் முண்முடி சூட்டப்பட்டதை தியானிப்போமாக.

4-வது கர்த்தர் சிலுவை சுமந்துபோனதை தியானிப்போமாக.

5-வது சேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டதையும் மரித்ததையும் தியானிப்போமாக.

88 மகிமைத் தேவரகசியம்.

1-வது சேசுநாதசுவாமி உயிர்த்தெழுந்ததை தியானிப்போமாக.

2-வது சேசுநாதர் பரலோகத்திற்கு ஆரோகணமானதை தியானிப்போமாக.

3-வது இஸ்பிரீத்துசாந்து தேவமாதாவின் பேரிலும், அப்போஸ்தலர் பேரிலும் எழுந்தருளி வந்ததை தியானிப்போமாக.

4-வது தேவமாதா தமது ஆத்தும சரீரத்தோடு பரலோகத்துக்கு எழுந்தருளினதை தியானிப்போமாக.

5-வது தேவமாதா மோக்ஷராக்கினியாக முடிசூட்டப்பட்டதை தியானிப்போமாக.

முடிக்கிற வகையாவது.

அதி தூதரான அர்ச்: மிக்கேலே, தேவ தூதர்களான அர்ச்: கபிரியேலே, இரபயேலே, அப்போஸ்தலர்களான அர்ச்: இராயப்பரே, சின்னப்பரே, அருளப்பரே, நாங்கள் எத்தனைப் பாவிகளாயிருந்தாலும் நாங்கள் வேண்டிக்கொண்ட இந்த ஐம்பத்துமூன்று மணிச் செபத்தையும், உங்கள் தோத்திரங்களோடே ஒன்றாகக்கூட்டி அர்ச்: தேவமாதாவின் திருப்பாதத்திலே பாதகாணிக்கையாகவைக்க உங்களைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம். பர.

89 Kyrie,—கீறியெ.

கீறியெ எலேயிசொன்,—(3 தரம்.)

க்றீஸ்தெ எலேயிசொன்,—(3 தரம்.)

கீறியெ எலேயிசொன்,—(3 தரம்.)

90 Gloria,—குலோரிய

ழக்லோரியா இன் எக்ஷெல்சிஸ் டேயொ. எத் இன் தேர்ர பாக்ஸ் ஒமீனிபுஸ் bபோனெ வொலுன் தாதிஸ். லௌடாமுஸ் தே, பெனெடீக்ஷிமுஸ் தே.—அடொராமுஸ் தே. ழக்லொரி fிக்காமுஸ்தே.—ழக்ராத்சியஸ் ஆஜிமுஸ் தீபி ப்ரோப்தெர் மாஞும் ழக்லோரியம் தூஅம்.–டோமினெ டேஉஸ் ரேக்ஷெ லேஸ்திஸ், டேஉஸ்—

பாதெர் ஒம்னீப்பொ தென்ஸ்.—டோமினெ fவீலி உனிஜேனிதெ யேசு க்றீஸ்தெ,—டோமினெ டேஉஸ் ஆஞ்யுஸ் டேஇ fவீலியுஸ் பாத்ரிஸ்.—கு—இ தோல் லிஸ் பெக்காத மூண்டி மீசெரேரெ நோபிஸ் கு-யி தோல்லிஸ் பெக்காத மூன்டி, சூஷிப்பே டெப்ரெக்கத் சியோனெம் நோஸ்த்ரம்.—கு-இ சேடெஸ் அட்டேக்ஸ் தெரம் பாத்ரிஸ், மிசெரேரெ நோபிஸ்.—கு-ஒனியம் து சோலுஸ் சாங்துஸ்,—து சோலுஸ் டோமினுஸ்.—து சோலுஸ் அல் தீசிமுஸ், யேசு க்றீஸ்தெ.—கும் சாங்க் தொ ஸ்பீரிது, இன் ஓக்லோரிய டேஇ பாத்ரிஸ்.—ஆமென்.

கு.—டோமினுச் வொபீஸ்கும்.

சீ.—எத் கும் ஸ்பீரிது தூஒ.

(நிருபம் வாசித்து முடிந்த பின்.)

சீ.—டேயொ ஓக்ராத்சியஸ்.

(சுவிசேஷம் வாசிக்கத் துவக்கும்போது,)

கு.—டோமினுஸ் வொபீஸ்கும்.

சி.—எத் கும் ஸ்பீரிது தூ ஒ.

கு.—செக்கு—எந்த்சிய சாங்க்தி எவன் ஜேலிஇ செக்கூண்டும்...

சீ.—ஓக்லோரிய தீபி டோமினெ.

(சுவிசேஷம் வாசித்து முடிந்த பின்.)

சீ.— லௌஸ் தீபி க்றீஸ்தே.

91

Credo,—கிரேடோ

கிரேடோ இன் ஊனும் டேஉம்,—பாத்ரெம் ஒம்னிப்பொதேந்தெம், †வக் தோரெம் க்ஷேலி எத் தேர்ரெ, விசிபீலியும் ஒம்னியும், எத் இன்விசிபீலியும்.- எத் இன் ஊனும் டோமினும் யேசும் க்றீஸ்தும், †வீலியும் டேஇ உனிஜேனிதும்.— எத் எக்ஸ் பாத்ரெ நாதும் ஆந்தெ ஒம்னிய சேக்குல.—டேஉம் டெ டேஒ. லூமென் டெ லூமினெ, டேஉம் வேரும் டெ டேஒ வேரொ.—ஜேனிதும் நொன் †வாக்தும், கொன்சுப்ஸ் தன்த்சியாலெம் பாத்ரி: பெர் கு—எம் ஒம்னிய †வாக்த சுந்த்.—கு—இ ப்ரோப்தெர் நோஸ் ஓமினெஸ், எத் ப்ரோப்தெர் நோஸ்தரம் சலூதெம் டெஷேன்டித் டெ க்ஷேலிஸ்—எத் இன்க்கர்னு துஸ் எச்த் டெ ஸ்பீரிது சாங்க்தொ, எக்ஸ் மரீய வீர்ஜினெ: எத் ஒமொ †வாக்துஸ் எச்த். க்ருக்ஷி †விக்சுஸ் எத்சியம் ப்ரொ நோபிஸ், சுbப் போன்த்சியொ பிலாதொ பாசுஸ் எத் செப்பூல்துஸ் எச்த்.—எத்ரெ சுரேக்சித் தேர்த்சிய டீயெ, செக்கூன்டும் ஸ்க்ரிப்தூரஸ்.—எத் அஷேன்டித் இன் க்ஷேலும், சேடெத் அட் டேக்ஸ்தெரம் பாத்ரிஸ்.— எத் ஈதெரும் வெந்தூருஸ் எச்த் கும் ɣக்லோரிய, யுடிக்காரெ வீவொஸ் எத் மோர்துஒஸ்: கூயுஸ் ரேஞிநொன் எரித் †வீனிஸ்.—எத் இன் ஸ்பீரிதும் சாங்க்தும், டோமினும், எத் விவி †விக்காந்தெம், கு—இ எக்ஸ் பாத்ரெ †விலியோகு—எ ப்ரொ க்ஷேடித்.—கு—இ கும் பாத்ரெ எத் †வீலியொ சீமுல் அடொராதுர் எத் கொங்ɣக்லொரி† விக்காதுர்: கு—இ லொகூதுஸ் எச்த் பெர் ப்ரொ வேதஸ்

எத் ஊனம் சாங்க்தம் கதோலிக்கம் எத் அப்பொஸ்தோலிக்கம் எக்லேசியம்.—கொண்'வீதெஓர் ஊனும் bபப்தீஸ்ம இன் ரெமிசியோனெம் பெக்கதோரும்.—எத் எக்ஸ்பேக்தொ ரெசுரெக்சியோனெம் மொர்து ஒரும் எத் வீதம் வெந்தூரி சேக்குலி.—ஆமென்.

கு.—டோமினுச் வொபீஸ்கும்.

சீ.—எத் கும் ஸ்பீரிது தூஓ.

The Preface.

கு.—பெர் ஓம்னியா சேக்குல செக்குலோரும்.

சீ.—ஆமென்.

கு.—டோமினுச் வொபீஸ் கும்.

சீ.—எத்கும் ஸ்பீரிது தூஓ.

கு.—சூர்சும் கோர்டா.

சீ.—அபேமுஸ் அட் டோமினும்.

கு.—கிராத்சியச் அகாமுச் டோமினொ டேஓ நோஸ்த்ரொ.

சீ.—டீஞ்யும் எத் யூஸ்தும் எசத்.

92 Sanctus.—சாங்க்துஸ்.

சாங்க்துஸ், சாங்க்துஸ், சாங்க்துஸ்டோமினுஸ் டேவுஸ் சாபஒத். ப்லேனி சுந்த் க்ஷேலி எத் தேர்ர ழக்லோரிய தூ அ. ஓசான்ன இன் எக்ஷேல்சிஸ்.—

bபெனெடீக்துஸ் கு-இ வேனித் இன்நோமினெ டோமினி ; ஓசான்ன இன் எக்ஷேல்சிஸ்.

(பரமண்டல மந்திரத்திற்கு முன்)

கு.— பெர் ஓம்னிய சேக்குல செக்குலோரும்.

சீ.—ஆமென்.

(பரமண்டல மந்திரம் முடிந்த உடன்.)

சீ.—செட் லீபெர நோச் அ மாலொ.

கு.—ஆமென்.

(சில நேரத்திற்குப் பின்)

கு.—பெர் ஓம்னிய சேக்குல செக்கு லோரும்.

சீ.—ஆமென்.

கு.—பாக்ச் டோமினி சித் சேம்ப்பெர் வொபீச் கும்.

சீ.—எத் கும் ஸ்பீரிது தூஒ.

93 Agnus,—ஆஞ்யுஸ் டேயி.

ஆஞ்யுஸ் டேஇ, கு-இ தோல்லிஸ் பெக்காத மூண்டி, மிசெரேரெ நோபிஸ்.

ஆஞ்யுஸ் டேஇ, கு-இ தோல்லிஸ் பெக்காத மூண்டி, மிசெரேரெ நோபிஸ்

ஆஞ்யுஸ் டேஇ, கு-இ தோல்லிஸ் பெக்காத மூண்டி, டோன நோபிஸ் பாக்ஷம்.

கு.—டோமினுச் வொபீஸ்கும்.

சீ.—எத் கும் ஸ்பீரிது தூஒ.

கு.—ஈதே, மீச எச்த் (அல்லது) bபெனெடிக்கா மூஸ் டோமினெ.

சீ.— டேஒ ழக்ராத்சியஸ்.

திவ்விய நற்கருணை ஆசீர்வாதம்

இலத்தீன் பாட்டுகள்.

94 O Salutaris,— ஓ சாலுதாரிஸ்.

ஓ சாலுதாரிஸ் ஒஸ்திய !
கு-எ கேஷிலி பான்டிஸ் ஒஸ்தியும் !
bபேல்ல ப்ரோமுந்த் ஒஸ்தீலிய :
ட ரோபுர், fவேர் ஔக்சீலியும்.
ஊனி த்ரினோக்கு-எ டோமினொ
சித் செம்ப்பிதேர்ன க்லோரிய,
கு-இ வீதம் சீனெ தேர்மினொ
நோபிஸ் டோனெத் இன் பாத்ரிய.—

ஆமென்.

95 பானிஸ் ஆன்ஜலிக்தஸ்.

1. பானிஸ் அன்ஜேலிக்குஸ் fவித் பானிஸ் ஓமினும் டத் பானிஷேலிக்குஸ் fவிகூரிஸ் தேர்மினும், ஓ ரெஸ் மிராபிலிஸ் ! மன்டுக்கத் டோமினும், பௌப்பெர், சேர்வுஸ் எத் ஊமிலிஸ்.

2. தெத்ரீன சேயிதஸ் உனுச்கு-எ பொஷிமுஸ், சிக் நோஸ்து வீசித, சிக்குத் தெ கோலிமுஸ், பெர்தூ அஸ் சேமிதஸ் டுக்நோஸ் கு-ஓ தேன்டிமுஸ், அட் லூகெஷம்கு-அம் இனபிதாய்.—ஆமென்.

96 Ecce Panis,—எக்ஸெ பானிஸ்.

1. எக்செ பானிஸ் அன்ஜெலோரும்,
fவாக்துஷீபுஸ் வியதோரும் :
வேரெ பானிஸ் fவிலியோரும்,
நொன் மித்தேன்டுஸ் கானிபுஸ்,
இன் fவிகூரிஸ் ப்ரெசிஞாதுர்,
கும்இசாஅக் இம்மொலாதுர் :
ஆஞ்யுஸ் பாஸ்கெ டெப்புதாதுர் :
டாதுர் மான்ன பாத்ரிபுஸ்.
bபொனெ பாஸ்தொர், பானிஸ் வேரெ,
யேசு, நோஸ்த்ரி மிசெரேரெ :
து நோஸ் பாஷெ, நோஸ் துஎரெ :
து நோஸ் bபோன fவாக் விடேரெ,
இன் தேர்ர விவேன்த்சியும்.

97 Ave maris stella,— ஆவே மாரிஸ் ஸ்தேல்ல.

1. ஆவெ மாரிஸ் ஸ்தேல்ல,
டேஇ மாதெர் ஆல்ம,
அத்க்கு—எ சேம்பெர் வீர்கொ,
fவேலி க்ஷேலி போர்த.

2. சூமென்ஸ் ஈல்லுட் ஆவெ,
gகப்ரியேலிஸ் ஓரெ,
fவூன்ட நோஸ் இன் பாக்ஷெ,
மூதன்ஸ் ஏவெ நோமென்.

3. சோல்வெ வீங்க்ல ரேயிஸ்,
ப்ரோ|வெர் லூமென் க்ஷேக்ஷிஸ்,
மால நோஸ்த்ர பேல்லெ,
|போன கூங்க்த போஷெ.
4. மோன்ஸ்த்ர தெ எசெ மாத்ரெம்,
சூமத் பெர் தெ ப்ரேக்ஷேஸ்,
கு-இ ப்ரொ நோபிஸ் நாதுஸ்,
தூலித் எசெ தூஉஸ்
5. வீர்கொ சிங்குலாரிஸ்,
இந்தெர் ஓம்னெஸ் மீதிஸ்,
நொஸ் கூல்ப்பிஸ் சொலூதொஸ்,
மீதெஸ் |வாக் எத் காஸ்தொஸ்.
6. வீதம் ப்ரேஸ்த பூரம்,
ஈதெர் பார தூதும்,
உத் விடேந்தெஸ் யேசும்,
சேம்ப்பெர் கொல்லெதேமுர்.
7, சித் லெளஸ் டேயொ பாத்ரி,
சூம்மொ க்ரீஸ்தொ டேக்குஸ்,
ஸ்பிரீதுஇ சாங்க்தொ,
த்ரீபுஸ் ஓனெர் ஊனுஸ்.—ஆமென்.

98 Salve Regina,—சால்வெ ரெஜீனெ.

சால்வெ ரெஜீன, மாதெர் மிசெரிக் கோர்டியெ, வீத டுல்க்ஷேடொ எத்ஸ்பெஸ் நோஸ்த்ர, சால்வெ;-அட் தெக்லமாமுஸ், எக்சுலெஸ் fவீலியி எவெ ;—அட் தெ சுஸ்ப்பிராமுஸ் ஜேமேந்தெஸ் எத் fவ்லேந்தெஸ், இன் அக் லக்ரிமாரும் வால்லெ ;—எய! எர்கொ,: அட்வொக்

காத நோஸ்த்ர, ஈல்லொஸ் தூஒஸ் மிசெரிக் கோர்டெஸ் ஒக்குலொஸ் அட் நொஸ் கொன்வேர்தெ,—எத் யேசும் bபெனடீக்தும் fவ்ருக்தும் வேந்த்ரிஸ் தூஇ, நோபிஸ் பொஸ்த் ஒக் எக்சீலியும் ஒஸ்தேன்டெ:—ஒ க்லேமென்ஸ்,—ஒ பீய,—ஒ டூல்க்ஷிஸ் வீர்கொ மரீய!

கு.—ஒர ப்ரொ நோபிஸ் சாங்க்த டேயி ஜேனித்ரிக்ஸ்.

சீ.—உத் டீஞி எfவ்விக்ஷியாமுர் ப்ரொ மிசியோனி புஸ் க்றீஸ்தி.

கு.—ஒரொமுஸ் ...... பெர் க்றீஸ்தும் டோமினும் நோஸ்த்ரும்.

சீ.—ஆமென்.

99 Cor Jesu,—கொர் யேசு.

கொர் யேசு சக்ரதீசிமும்,
மிசெரோரெ நோபிஸ்

Cor Mariae—கோர் மரீயெ.

கொர் மரியெ இம்மாக்குலாத்தும்
ஒர ப்ரொ நோபிஸ்.

100 Tu Es Petrus,— து எஸ் பேத்ருஸ்.

து எஸ் பேத்ருஸ் எத் சூப்பெர் ஆங்க் பேத்ரம் எடிfவிக்காபொ எக்லேசியம் மேயம்.

டோமினுஸ் கொன்சேர்வெத் எயும் எத்விவீfவிக்கேத் எயும் எத் bபெயாதும் fவாக்ஷியத் எயும் இன் தேர்ர, எத் நொன் த்ராடத் எயும் இன் ஆனிமம் இனிமிக் கோரும் எயுஸ்.

101 Tantum Ergo,—தாந்தும் எர்கோ.

தாந்தும் எர்கோ சக்ரமேநதும்,
வெனெரேமுர் க்ஷேர்னுஇ
எத் அந்தீக்கு-உம் டொக்குமேந்தும்,
நோவொ க்ஷேடத் ரீதுஇ,
ப்ரெஸ்தெத் fவீடெஸ் சுப்லெமேந்தும்,
சேன்சுவும் டெfவேக்துஇ.
ஜெனிதோரி, ஜெனிதோக்கு-எ,
லௌஸ் எத் யுபிலாத்சியொ,
சாலுஸ், ஒனொர், வீர்துஸ் கு-ஒக்கு-எ,
சித் எத் bபெனெடிக்சியொ,
ப்ரொசெடேந்தி அbப் உத்ரோக்கு-எ
கோம்ப்பர் சித் லௌடாத்சியோ.—
ஆமென்.

102 Laudate,—லௌதாத்தே தோமினும்.

லௌடாதெ டோமினும் ஒம்னெஸ் ஜேந்தெஸ்: லௌடாதெ எயும் ஒம்னெஸ் போப்புலி,

கு-ஒனியம் கொன்fவிர்மாத எஸ்த் சுப்பெர் நோஸ் மிசெரிக்கோர்டிய எயுஸ்: எத் வேரிதஸ் டோமினி மானெத் இன் எதேர்னும்.

ஒக்லோரிய பாத்ரி, எத் fவீலியோ எத் ஸ்பிரீதுஇ சாங்க்தோ.

சீக்குத் எரத் இன் ப்ரின்கூஷீப்பியொ, எத் நுங்க் எத் சேம்ப்பெர்: எத் இன் சேக்குல செக்குலோரும். ஆமென்.

திவ்ய சற்பிரசாத திருமணி ஆராதனை ஜெபங்கள்.

103 முதல் கால் மணி காணிக்கை ஜெபம்.

பரிசுத்த பரம திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் என் திவ்விய சேசுவே! நித்தியத்திற்கும் உமக்கு நான் சொந்தமாயிருக்கும்படிக்கு என்னை முழுதும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். நான் உமக்காக ஜீவிக்கும் பொருட்டும், என் ஆயுள் முழுமையும் உமக்காகவே செலவழிக்கவும், என் சரீரத்தை அதனுடைய சகல அவயவங்களுடனே உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். உம்மைப் பற்றியல்லாமலும், உமது இஷ்டத்திற்கு ஏற்காத விதமாகவும், வேறொருவரையும் நான் சிநேகியாமலிருக்கும் பொருட்டு, என் எளியதும், அற்பமும், அயோக்கியமுமான இருதயத்தை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். என் ஆத்துமத்தை அதன் சகல உணர்ச்சிகளுடனே உமக்குக் கையளிக்கிறேன். உம்மை அடிக்கடி நினைக்கும்படி அதன் ஞாபக சக்தியையும் உம்மை பரிசோதித்துப் பகுத்தறியும் படியாக அதன் புத்தி சக்தியையும், உம்பக்கம் திரும்பி இருக்கும்பொருட்டு அதன் நாட்டங்களையும் உமக்குப் பிரதிஷ்டைப் பண்ணுகிறேன்.

என் மதுர சேசுவே! இவற்றைவிட என்னுல் உமக்குக் கொடுக்கக் கூடியது யாதொன்றுமில்லே. எனக்குள்ளவை யாவும் இவைதானே, தயை கூர்ந்து இவற்றை யேற்றுக்கொள்ளும். ஆ! உம்மை சிநேகிக்கிறதற்காகவும், உமக்கு ஒப்புக்கொடுக்கிறதற்காகவும், சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய இருதயங்களும் எனக்குண்டாயிருந்தால், நான் எவ்வளவோ பாக்கியவானுயிருப்பேன். ஆமென்சேசு.

மனேவல்லப ஜெபம்.

"சேசுவின் மதுரமான திரு இருதயமே!—என் சிநேகமாயிரும்." (300 நாள் பலன்.)

"தேவ நற்கருணையில் எழுந்தருளியிருக்கும் சேசுவின் அதிபரிசுத்த இருதயம்—என்றென்றைக்கும் வாழ்த்தப்படக்கடவது." (300 நாள் பலன்.)

"இருதயத்தில் தாழ்ச்சியும், சாந்தமுமுள்ள சேசுவே—என்னிருதயத்தை உமது திரு இருதயத்தைப்போல் செய்தருளும்." (300 நாள் பலன்.)

தேவ நற்கருணைக்குத் தோத்திரமான ஜெபம்.

மிகுந்த நேசத்துக்குரிய சேசுவே, தேவ நற்கருணையில் எப்பொழுதும் என்றென்றைக்கும் உமக்கு ஸ்துதியும், நன்றியறிந்த ஸ்தோத்திரமும் செலுத்தப்படக்கடவது. சமஸ்த பரலோக பூலோகத்தின் நேசத்துக்

குப் பாத்திரமாயிருக்கிறீர். நன்றிகெட்ட பாவியாகிய அடியேன் மட்டில் வைத்த அத்தியந்த நேசத்தால் தேவரீர் மனுஷ சுபாவத்தைத் தரித்துக் கொண்டு கொடிய அடிபடுகையில் உம்முடைய விலைமதியாத திரு உதிரத்தைச் சிந்தி எல்லாருக்கும் நித்திய இரட்சண்ணியத்தை வருவிக்கவேணுமென்று அவமானத்துக்குரிய சிலுவையில் மரணமடையச் சித்தமானீரே, என் ஆத்துமத்தில் ஆழமாய் பதிந்த உறுதியான விசுவாசத்தினால் அடியேன் பிரகாசம் அடைந்து இப்போது தாழ்ச்சியோடும், பத்திப்பற்றுதலோடும் உம்மைக் கேட்பதேதெனில் என் இருதயத்தை ஆளுகிற துராசா பாசங்களை எல்லாம் நிர்மூலம் பண்ணும்படி எனக்குத் தைரியங்கொடுக்க வேணுமென்றும், அதிக கொடுமையான துன்பங்களிலும் நான் உம்மைத் துதித்து என் சகல கடமைகளையும் பிரமாணிக்கமாய் நிறைவேற்றுவதால் உம்மை மகிமைப்படுத்திப் பாவத்தைப் பூரணமாய் வெறுக்கும்படி செய்து என்னை அர்ச்சியசிஷ்டவனாக்க வேணும் என்றும் தேவரீர் அனுபவித்த கொடூர பாடுகளின் பேறுபலன்களைக் குறித்தும் உம்மை மன்றாடுகிறேன்.—ஆமெனசேசு.

மனுஷரோடு சம்பாஷிக்கிற சேசுநாதருடைய திரு இருதயத்தின் பிரார்த்தனை.

சுவாமி கிருபையாயிரும்

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமி கிருபையாயிரும்.

கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையை நன்ருகக் கேட்டருளும்.

பரமண்டலங்களிலே இருக்கிற பிதாவாகிய சர்வேசுவரா,—எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி.

உலகத்தை மீட்டு இரட்சித்த சுதனுகிய சர்வேசுவரா,—எங்க...

இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுவரா,—எங்க...

அர்ச்சியசிஷ்ட தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுவரா,—எங்க...

மனுஷரோடு சகவாசமான சேசுவின் திரு இருதயமே,—எங்க...

அர்ச். மரியம்மாளுக்குஞ் சூசையப்பருக்குங் கீழ்ப்படிந்திருந்த சேசுவின் திரு இருதயமே,—எங்க...

எங்களுக்காகப் பிதாவினுல் அனுப்பப்பட்ட சேசுவின் திரு இருதயமே,—எங்க...

இஸ்பிரீத்துசாந்துவினுல் நடப்பிக்கப்பட்ட சேசுவின் திரு இருதயமே,—எங்க...

ஞானத்தின் சீவியம் நிறைந்த சேசுவின் திரு இருதயமே,—எங்க...

இரக்கத்தாலும், உத்தமத்தாலும் பூரணமாய் நிரப பப்பட்ட சேசுவின் திரு இருதயமே,—எங்க...

செயிக்கப்படாத கோட்டையாகிய சேசுவின் திரு இருதயமே,—எங்க...

வாக்கிலும், செயலிலும் வல்லமை பொருந்திய சேசுவின் திரு இருதயமே,—எங்க...

சர்வேசுவரனுடைய மகிமையின் அபேட்சையால் பற்றி எரியுஞ் சேசுவின் திரு இருதயமே,—எங்க...

ஞானக்குறையுள்ளவர்களைச் சீர்திருத்துஞ் சேசு வின் திரு இருதயமே,—எங்க...

அற்புதங்கள் செய்துவருஞ் சேசுவின் திரு இரு தயமே,—எங்க...

சகலருக்கும் நன்மை செய்துவருஞ் சேசுவின் திரு இருதயமே,—எங்க...

முடிவற்ற பொறுமை உடைத்தாயிருக்குஞ் சேசு வின் திரு இருதயமே,—எங்க...

நிர்ப்பாக்கியர்களுக்கு அடைக்கலமாகிய சேசு வின் திரு இரு தயமே,—எங்க...

பாவிகளின் மட்டில் துக்க நேசமுள்ள சேசுவின் திரு இருதயமே,—எங்க...

வியாதிக்காரர்களுக்குத் தேற்றரவான சேசுவின் திரு இருதயமே,—எங்க...

மிகுந்த உதார குணத்தையுடைய சேசுவின் திரு இருதயமே,—எங்க...

உமது சத்துராதிகள் மட்டில் பூரண சாந்த குண முள்ள சேசுவின் திரு இருதயமே,—எங்க...

உமது நேசர்களின் மட்டில் மிகுந்த பற்றுதலுள்ள சேசுவின் திரு இருதயமே,—எங்க...

பேதைகளுடனே சம்பாஷிக்க மனங்கூசாத சேசுவின் திரு இருதயமே,—எங்க...

மனத் தாழ்மைக்கும் மதுர குணத்துக்கும் மாதிரிகையான சேசுவின் திரு இருதயமே,—எங்க...

ஏகாந்தத்துக்கு முன் மாதிரிகையான சேசுவின் திரு இருதயமே,—எங்க...

உலகத்தினுடைய பாவங்களை.—மற்றதும்.

முதல்.—என்னுடைய ஆத்துமத்துக்குச் சாதுவையுங் கீழ்ப்படிதலையுங் கற்பித்தருளும்

துணை.—என்னுடைய சீவியத்துக்குச் சமாதானத்தைக் கட்டளையிட்டருளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

கர்த்தராகிய சேசு கிறீஸ்துநாதரே, நீர் சீவித்து மனுஷரோடு சம்பாஷித்துச் சாதுவாகவும், அமரிக்கையாகவும் இருந்தீரே, உமது மாதிரிகையை நாங்கள் பின்பற்றி எங்கள் சகோதரர்களுடன் சம்பாஷித்து வர எங்களுடைய இருதயத்தில் உமது சாந்தத்தையும், மதுரத்தையும் உட்செலுத்தியருளும். சதா நித்திய

காலம் பிதாவோடும், இஸ்பிரீத்து சாந்துவோடுஞ் சீவித்து வரும் மோட்ச வாசிகளுக்கு நீர் தந்த வாக்குத் தத்தத்தின் சமாதானத்தையுந் தந்தருளும்படிக்கு உம்மைப் பார்த்து மன்ருடுகிறோம்.—ஆமென்சேசு.

104 சேசு கிறீஸ்து நாதருடைய திவ்விய இருதயத்திற்கு செய்யப்படுகிற நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரச் சேபம்.

எங்கள் திவ்விய இரட்சகராகிய சேசுகிறீஸ்துவின் திரு இருதயமே. நாங்கள் மிகவும் நீசப்பாவிகளாயிருந்தாலும் உம்முடைய தயையை நம்பிக்கொண்டு உமது சன்னிதியில் பயபக்தியுள்ள வணக்கத்துடனே சாஷ்டாங்கமாக விழுந்து எங்கள் பேரில் இரக்கமாயிருக்கத் தேவரீரைப் பிரார்த்தித்துக் கொள்கிறோம். எங்கள் பாவங்களையும் நன்றிகெட்ட தனத்தையும் நினைத்து மிகவும் மனஸ்தாபப் படுகிறோம். அவைகளை அருவருத்து என்றென்றைக்கும் விலக்கி விடவும் எங்களாலே ஆனமட்டும் அவைகளுக்குப் பரிகாரஞ்செய்யவுந் துணிகிறோம் சுவாமீ. அடியோர்கள் உமக்குச் செய்த தோஷ துரோகங்களுக்காகவும் அஞ்ஞானிகள், பதிதர், பொல்லாத கிறீஸ்துவர்கள் முதலானவர்கள் உமக்குச் செய்கிற நிந்தை அவமானங்களுக்காகவும் மிகுந்த துக்க மனஸ்தாபப்பட்டு அவைகளைத் தேவரீர் பொறுக்கவும் சகலரையும் நல்ல வழியிலே திருப்பி இரட்சிக்கவும் வேணுமென்று தேவரீரை மன்ருடுகிறோம். உம்முடைய இரு

தயத்திற்குச் செய்யப்பட்ட சகல நிந்தை அவமான துரோகங்களுக்குப் பரிகாரமாக அற்பமாகிய எங்கள் ஆராதனை வணக்க தோத்திரங்களையுமல்லாமல் மோட்சத்தில் வாழுகிற சகல சம்மனசுக்கள் அர்ச்சியசிஷ்டவர்களின் ஆராதனைப் புகழ்ச்சிகளையும் பூலோகத்திலுள்ள சகல புண்ணியாத்துமாக்களின் ஸ்துதி நமஸ்காரங்களையும் மிகுந்த தாழ்ச்சி விநயத்துடனே தேவரீருக்குச் செலுத்துகிறோம். மீளவும் எங்கள் திவ்விய சேசுவே, எங்களுக்கு ஏக நம்பிக்கையே, அடியோர்கள் எங்களை முழுதும் இப்போதைக்கும் எப்போதைக்கும் உம்முடைய திரு இருதயத்திற்கு ஒப்புக்கொடுக்கிறோம் சுவாமீ. தேவரீர் எங்கள் இருதயத்தை உமது கைவசமாக்கிச் சுத்தப் படுத்தி அர்ச்சியசிஷ்ட இருதயமாகச் செய்தருளும். நாங்கள் சீவனோடே யிருக்குமட்டும் எங்களைச் சகல சத்துருக்களுடைய சர்ப்பனைகளிலேயும் நின்று காத்து இரட்சியும் சுவாமி.

தேவரீர் சகல மனிதருக்காகவும் சிலுவை மரத்தில் சிந்தின விலைமதியாத திரு இரத்தத்தைப் பார்த்து இந்த மன்றாட்டுகளைத் தந்தருளும் சுவாமி.

ஆமென்சேசு.

திவ்விய அப்பத்திலெழுந்தருளி யிருக்குஞ்

சேசுவை மன்றாடுவோமாக.

உயிருள்ள தேவனின் குமாரராகிய சேசுவே! எங்களுடைய ஆத்துமங்களை நரகத்தினின்று இரட்சிக்க மாட்டுக் கொட்டகையிற் பிறந்து சிலுவையில் மரித்து இதோ இப்போது இப்பீடத்தின் மீதுள்ள திவ்விய நற்கருணை பெட்டியில் மறைந்திருக்கிறீர்.

திவ்விய அப்பத்தில் உமது திருச் சரீரத்தோடும் திருவிரத்தம் ஆத்துமந் தேவ சுபாவத்தோடும் உண்மையாகவே எழுந்தருளியிருக்கும் உம்மைச் சாஷ்டாங்கமாய் ஆராதிக்கிறேன்.

என் மதுர இரட்சகரே! உமது நேசத்தின் இப் பரம விரகசியத்தை நாளுக்கு நாள் அதிகமதிகமாய் தொழும்படியும் பூசையில் நடக்கும் பலியோடு அதி உன்னதமான விதமாய் ஒன்றித்திருக்கவும் நற்கருணை வழியாய் உமது திருச் சரீரத்தை அடிக்கடி உட்கொள்ளவுங் கிருபைகூரும்.

இப் பூமியிலிருக்குமளவுந் தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்திற் பிரமாணிக்கமாயிருந்து மோட்சத்திற் சதா காலம் உமது பரிசுத்த மார்பில் இப்பாளைறும்படி எனக்குப் பாவத்தின் மட்டில் பகையையும் உம்மீது வேகமான நேசத்தையும் வருவித்தருளும்.

ஒ சேசுவே—நாங்கள் உம்மை ஆராதிக்கிறோம்.

ஒ சேசுவே—நாங்கள் உம்மை விசுவசிக்கிறோம்.

ஒ சேசுவே—நாங்கள் உம்மை நம்பியிருக்கிறோம்.

ஒ சேசுவே—நாங்கள் உம்மை நேசிக்கிறோம்.

ஒ சேசுவே—எங்களை நல்லவர்களாக்கியருளும்.

ஒ சேசுவே—எங்களைப் பரிசுத்தப்படுத்தும்.

ஒ சேசுவே—எங்களைப் பலமுள்ளவர்களாக்கியருளும்.

ஒ சேசுவே—எங்களை அர்ச்சியசிஷ்டவர்களாக்கியருளும்.

சேசுவோடு, அவருடைய பரிசுத்த தாயாகிய மரியம்மாளும், அர்ச். சூசையப்பரும் — ஸ்துதிக்கப்படக் கடவார்களாக.—ஆமென்சேசு.

சேசுநாதருடைய திருப் பாடுகளின் பிரார்த்தனை

சுவாமி கிருபையாயிரும்.—மற்றதும்.

சர்வ தயாபர சேசுவே,—பாவிகளாகிய எங்கள் பேரில் தயவாயிருஞ் சுவாமி.

மண்ணால் மனிதனையுண்டாக்கி, திவ்விய கருணையால் வல்லவனாக்கி அவன் கையால் பாடுபடத் திருவுளமான என் தயாபர சேசுவே.—பாவி...

மட்டற்ற மகிமைப் பிரதாபமுள்ள தேவ சுபாவத்தோடு மட்டிலடங்காத ஈன சுபாவத்தைப் பந்தனமாகக் கட்டி மனித அவதாரமெடுக்கத் திருவுளமான என் தயாபர சேசுவே—பாவி...

தாரித்திரத்திற் பிறந்து வளர்ந்து துன்பத்தில் உயிர்விடத் திருவுளமான என் தயாபர சேசுவே—பாவி...

ஊணுறக்கமற்று உடலை வெறுத்து நாற்பது நாள் இரவும் பகலும் உபவாசமாயிருந்த என் தயாபர சேசுவே—பாவி...

கொடிய சத்துருவாகிய பசாசின் கையால் எடுக்கப்பட்டுச் சோதிக்கப்பட்ட என் தயாபர சேசுவே—பாவி...

பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் அதிபதி கர்த்தராயிருந்தும் எளிய இராயனுக்கு இறை கொடுக்கத் திருவுளமான என் தயாபர சேசுவே—பாவி...

நித்திய பிதாவின் ஞானச சொரூபியாயிருந்தும் அஞ்ஞானம் நிறைந்த மனிதர்களால் ஆகடியஞ் செய்யப்பட்ட என் தயாபர சேசுவே—பாவி...

பரிசுத்தரிலும் பரிசுத்தராயிருந்தும் பாவ வேஷ மணிந்து பிதாவின் சமுகத்தில் பாவிபோல் நின்ற என் தயாபர சேசுவே—பாவி...

சம்மனசுக்களுடைய உண்மையான சந்தோஷமாயிருந்தும் சஞ்சல சாகரத்திலமுழ்ந்திச் சலிப்பையடைந்து பிராண அவஸ்தைப்பட்ட என் தயாபர சேசுவே—பாவி....

சகல சீவாத்துமாக்களுக்கும் அபயமாயிருந்தும் மரண அகோரத்தைக் கண்டு அஞ்சி நடுங்கி உதிர வெயர்வை ஒழுகி நின்ற என் தயாபர சேசுவே--பாவி...

பேய்க்கடிமையான என்னை மீட்டு இரட்சிக்கத் திருவுளமான என் தயாபர சேசுவே—பாவி....

துஷ்ட யூதர்கள் கையில் அகப்பட்டு, கள்ளனைப் போலக் கட்டுண்டு, தெரு வீதிகளில் இழுக்கப்பட்ட என் தயாபர சேசுவே—பாவி....

சேதரோனென்கிற நதியில் அழுந்தி தேகமெல்லாம் விறைத்து நின்ற என் தயாபர சேசுவே—பாவி...

அநீத குருக்கள் சபையில் அமைந்து, பொய்ச் சாட்சிகளுக்குப் பணிந்து தேவ பழிக்காரனுகக் கூறப்பட்ட என் தயாபர சேசுவே—பாவி....

திருக்கன்னத்தில் அறையப்பட்டு, திரு விழிகள் மறைக்கப்பட்டு, இரா முழுதும் அவஸ்தைகளை அநுபவித்த என் தயாபர சேசுவே—பாவி....

வஸ்திரம் உரியப்பட்டு கற்றூணில் கட்டப்பட்டு, சதைகள் தெறிக்க அடிக்கப்பட்ட என் தயாபர சேசுவே —பாவி....

சோபம் நிறைந்து கை கால் அயர்ந்து இரத்தத்தில் குப்புற விழுந்த என் தயாபர சேசுவே—பாவி....

திருச் சிரசில் முண்முடியை அழுத்திப் பீற்றற் சகலாத்தை முதுகிற் போர்த்திப் பரியாச இராசாவாக நிந்திக்கப்பட்ட என் தயாபர சேசுவே—பாவி....

பரபாஸ் என்கிற கள்ளனிலும் பாதகனென்று எண்ணப்பட்டுப் பழிகாரர் கையில் ஒப்புக்கொடுக்கப் பட்ட என் தயாபர சேசுவே—பாவி....

பாரச் சிலுவையைத் தோளிற் சுமந்து பரிதாப மாய் நடந்து பலமுறை குப்புற விழுந்த என் தயாபர சேசுவே—பாவி...

யாவராலும் கைவிடப்பட்டு, அப்போஸ்தலரால் மறுதலிக்கப்பட்டு, ஆருமற்ற பரதேசியைப்போல நின்ற என் தயாபர சேசுவே—பாவி....

சிலுவையின் மீதே சமனுற்று, திருப் பாத கரங் களில் ஆணியறைந்து, இரு கள்ளருக்கு நடுவில் நாட் டப்பட்ட என் தயாபர சேசுவே—பாவி....

உச்சந்தலை துவக்கி உள்ளங்கால் பரியந்தம் ஏக காயமாய் ஒரு சாமமட்டும் சிலுவையில் தொங்கி நின்ற என் தயாபர சேசுவே—பாவி....

பிதாவின் சொற்குக் கீழ்படிந்து ஈனமென்னப் பட்ட யாவற்றையும் ஏகமாயடைந்து நோக்காட்டு மனிதனுன என் தயாபர சேசுவே—பாவி....

உபாதிக்கிற சத்துருக்களுக்காகப் பிதாவை இரந்துக்கொண்டு உலகத்திற்கெல்லாம் பலியாயிருந்த என் தயாபர சேசுவே—பாவி....

திரு முகம் அயர்ந்து, திரு விழிகள் மறைந்து, திருச் சிரசு கவிழ்த்து மரணமடைந்த என் தயாபர சேசுவே—பாவி....

எங்களுக்காகப் படாத பாடுபட்டு எங்கள் பாவத்திற்காக உமது இரத்தமெல்லாஞ் சிந்தி எங்கள் உயிரைக் காப்பாற்ற உமது உயிரைக் கொடுத்த என் தயாபர சேசுவே—பாவி...

எங்களுக்கு நீர் செய்த நன்றி எல்லாம் மறந்து எங்களுக்காகப் படாத பாடுபட்டதையெல்லாம் எண்ணுமல் உமக்குத் துரோகஞ்செய்த—எங்கள் பாவங்களைப் பொறுத்தருளுஞ் சுவாமி.

நெஞ்சுருகி இருதயம் தவிடு பொடியாகப் பிளந்து கண்ணீர் சொரிந்து வடிந்து நிற்கும்—எங்கள்...

எங்கள் பாவத்தின் கனத்தையும் கொடுமையையும் பாராமல் உமது நன்மையின் விசாலத்தையும் கிருபையையும் பார்த்து—எங்கள்...

நீர் பட்ட அடிகளையும் முறிவுகளையும் உமது திரு உதிரத்தையும் பார்த்து—எங்கள்...

உலகத்தினுடைய பாவங்களை.—மற்றதும்.

முதல்—உபத்திரவ மரணத்தால் எங்களை மீட்டு இரட்சித்த சேசுவே.

துணை—உபத்திரவங்களைப் பொறுமையுடனே அனுபவிக்க உமது இரட்சணையின் பலனை நாங்கள் அடையக் கிருபை செய்தருளுஞ் சுவாமி.

பிரார்த்திக்கக்கடவோம்.

எங்களிடத்தில் வைத்த சிநேகத்தால் சொல்லி லடங்காத வேதனை வாதனைப் படவும் சிலுவையில் மரிக்கவுந் திருவுளமான சேசுவே! உமது சிநேகத் தைப்பற்றி நாங்கள் உலகத்திலிருக்குமளவும் துன்ப துரிதப்படவும், உம்மைப்பற்றி உமது பாவனையாக இவ்வுலகத்தில் உபத்திரவப்பட்ட பின்பு உம்முடனே கூடச் சதா காலமும் உம்மிடத்தில் வீற்றிருக்கவும், கிருபை செய்ய வேண்டுமென்று உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம்.—ஆமென்சேசு

---

105 கர்த்தாவே எனக்கு உதவி செய்தருளும்!

"கர்த்தாவே! எனக்கு உதவி செய்தருளும்" என்று கெஞ்சி மன்றாடின கானான் தேசத்து ஸ்திரீயின் தாழ்ச்சியுள்ள நம்பிக்கையுடன என் சகல அவசரங்களிலும் உம்மிடம் நான் வருவேனாக.

என் சகல சந்தேகங்களிலும், குழப்பங்களிலும்—கர்த்தாவே! எனக்கு உதவி செய்தருளும்.

ஏகாந்த பலவீன சோதனைச் சமயங்களிலும்.—கர்த்தாவே!...

துக்கங்களிலும், இழவுகளிலும்.—கர்த்தாவே!...

என் கோரிக்கைகள் நிறைவேறாமையால் விசனப்பட்டுக் கண்ணீரோடு உம்மை யண்டி வரும் வேளைகளில்.—கர்த்தாவே!...

மற்றவர்கள் எல்லோரும் எனக்கு உதவி செய்ய இயலாதவர்களாய் உமது சகாயம் மாத்திரம் எனக்கு ஏக சரணமாயிருக்கும்போது.—கர்த்தாவே!...

கருணை நிதியாகிய பிதாவே! என்னை முழுதும் உமக்கு ஒப்புக்கொடுக்கும்போது.—கர்த்தாவே!...

என் அலுவல்களில் பலன் ஒன்றுங் காணாமல் என் இருதயம் சோர்வடையும்போது.—கர்த்தாவே!...

என் சிரசாலும், இருதயத்தாலும் ஒன்றுஞ்செய்ய இயலாதவனுய் வியாதியால் வருந்தும்போது.—கர்த்!...

மரணமும் தீர்வையும் என்னை அண்டி வருங்காலத்தில் என் குற்றங்களையும், பிழைகளையும், குறைகளையும் பாராமல், எப்போதும், எக்காலமும்.—கர்த்!...

" ஓ! மிகவும் பரிசுத்த தேவத்திரவிய அநுமானத்தில் வீற்றிருக்கும் சேசுவே! எங்கள் மேல் தயவாயிரும். "—(100 நாள் பலன்.)

பரிகாரப் பிரார்த்தனை.

ஓ சேசுவே! திவ்விய இரட்சகரே! எங்கள் துரோகங்களுக்காகவும், எங்கள் சகோதரராது துரோகங்களுக்காகவும் விசுவாசத்தையும், நேசத்தையுங் காட்டிப் பரிகாரஞ்செய்கிற கருத்தோடு ஒருமனப்பட்டு, இங்கே கூடி நிற்கிற மகிமைக் காப்பாளராகிய உம்முடைய பிள்ளைகளைக் கிருபையாய் நோக்கியருளும். நாங்கள் ஒருமனப்பட்டு இப்போது பிரசித்தமாகச் செய்யப்போகிற வாக்குத்தத்தங்கள் உம்முடைய திரு விருதயத்தை இளகச்செய்து, எங்கள் மேலும், மற்ற மனிதர்மேலும், உம்மை நேசிக்கப் பெருத நிர்ப்பாக்கியர் எல்லார் மேலும் நீர் கிருபையாய்ப் பார்த்தருளும்படி செய்வதாக.

நாங்கள் எல்லோரும் இனித் தேவரீருக்குப் பண்ணும் வாக்குத்தத்தம் என்னவென்றால் :—

மனிதர் உம்மை மறந்து செய்கிற நன்றிகேட்டுக்காக.—ஆண்டவரே! உமக்கு ஆறுதல் உண்டாக்குவோம்.

தேவ நற்கருணையிலே உமக்குண்டாயிருக்கிற தனிமைக்காக.—ஆண்டவரே!

பாவிகள் செய்கிறது ரோகங்களுக்காக.—ஆண்...

துஷ்டர் கொண்டிருக்கிற வர்மத்துக்காக.-ஆண்...

உமக்கு விரோதமாகச் சொல்லப்படுகிற தேவ தூஷணங்களுக்காக,—ஆண்டவரே!...

உமது தெய்வீகத்துக்குச் செய்யப்படுகிற அவமானங்களுக்காக.—ஆண்டவரே!...

உம்முடைய நேச தேவத்திரவிய அநுமானமாகிய தேவ நற்கருணைக்குச் செய்யப்படுகிற தேவ துரோகங்களுக்காக.—ஆண்டவரே!...

உம்முடைய திருச்சமுகத்திலே செய்யப்படுகிற அநாசார அவமானங்களுக்காக-—ஆண்டவரே!...

உம்மை இலக்காகக் கொண்டு மனிதர் செய்கிற நிந்தைகளுக்காக.—ஆண்டவரே!...

உம்முடைய பிள்ளைகளுக்குள்ளேயே பெரும்பான்மையோராற் பண்ணப்படுகிற அசட்டைத் தனத்துக்காக.—ஆண்டவரே!...

அவர்கள் உமது ஏவுதல்களைப் புறக்கணித்து வருகிற துரோகத்துக்காக.—ஆண்டவரே!...

நாங்கள் உமது சிநேகிதர்களென்று பாராட்டுகிறவர்களுடைய பிரமாணிக்க வீனத்துக்காக--ஆண்....

அநேகர் உம்முடைய இஷ்டப்பிரசாதங்களை அவப்படுத்திக்கொள்ளுகிற துரோகங்களுக்காக.—ஆண்...

நாங்களே தேவரீருக்குக் காட்டி வருகிற பிரமாணிக்க வீனத்துக்காக.—ஆண்டவரே!...

எங்கள் கொடிய கன்னெஞ்சுத் தனத்துக்காக.—ஆண்டவரே!...

நாங்கள் உம்மை நேசியாததுக்காக.—ஆண்ட...

உம்முடைய ஊழியத்திலே எங்களுக்குள்ள வெதுவெதுப்பான குணத்துக்காக.—ஆண்டவரே!...

ஆத்துமாக்கள் கெட்டுப் போகிறதைப் பற்றித் தேவரீருக்குண்டாகிற வியாகுலத்துக்காக—ஆண்ட...

எங்கள் இருதயங்களின் வாசலிலே தேவரீரை நாங்கள் நெடுநேரங் காத்திருக்கச செய்ததுக்காக.—ஆண்டவரே!...

மிகவுங் கொடிய நிந்தையினல் உமக்குண்டாகும் வியாகுலத்துக்காக.—ஆண்டவரே!...

தேவரீர் எறிகிற நேசமுள்ள பெருமூச்சுக்காக.—ஆண்டவரே !...

தேவரீர் சிந்துகிற நேசமுள்ள கண்ணீர்களுக்காக.—ஆண்டவரே !...

தேவரீருடைய நேசமுள்ள சிறைப்பாட்டுக்காக,—ஆண்டவரே ....

தேவரீருடைய நேசமுள்ள மரணத்துக்காக.—ஆண்டவரே ....

பிரார்த்திக்கக்கடவோம்.

ஓ சேசுவே ! திவ்விய இரட்சகரே ! தேவரீருடைய இருதயமானது எனக்கு ஆறுதலைச் செய்யக்கூடிய ஒருவனைத் தேடியும் நான் காணவில்லையே யென்று இப்படிச் சொல்லி முறையிட்டதே. இப்போது நாங்கள் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிற ஆறுதலைத் தேவரீர் தயவாய்க் கையேற்று தேவரீருடைய வரப்பிரசாத உதவியை எங்களுக்குப் போதிய மட்டுந்தந்து நாங்கள் தேவரீருக்குப் பொருந்தாத எல்லாவற்றையும் அதிக மதிகமாய் விலக்கி எப்போதும், எவ்விடத்தும், எல்லாவற்றிலும் தேவரீருக்கு மிகுந்த பிரமாணிக்கமும், பற்றுமுள்ள மகிமைக் காப்பாளராய் நடந்துவர அநுக்கிரகஞ் செய்தருளும். இந்தப் பரம சகாயத்தைத் தேவரீருடைய திரு இருதயத்தின் மூலமாக இரந்து மன்றாடுகிறோம். பிதாவோடும், இஸ்பிரீத்து சாந்துவோடும், ஏக தேவனுமாய் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிறவருமாயிருக்கிற ஆண்டவரே !—ஆமென்சேசு.

சிலுவையில் தொங்கும் நமதாண்டவரை நோக்கிச் செய்யும் செபம்.

சிலுவையில் அறையுண்ட என் சேசுவே! என் அவயவங்கள் யாவும் பலனற்றுப்போகும் என் மரண நேரத்தில் உமது சகாயம் எனக்கு இருக்கும்படியாக நான் இப்போது செய்யும் மன்றாட்டைத்,—

தயை செய்து கேட்டருளும்.

ஓ! என் மதுரமுள்ள சேசுவே! சோர்ந்து, மங்கி, பஞ்சடைந்த என் கண்கள் உம்மைப் பார்க்க சக்தி யற்றவைகளாய் விடும் சமயத்தில், இப்போது நான் உம் பக்கம் திருப்புகிற சிநேகம் நிறைந்து ததும்பும் பார்வையை அந்நேரத்தில் நினைத்து,—

என்மேல் இரக்கமாயிரும்.

உமது மிகவும் பரிசுத்த திருக் காயங்களை முத்த மிட என் வரண்ட உதடுகள் சக்தியற்றவைகளாகும் நேரத்தில் இப்போது நான் உம்மேல் பதிக்கும் முத்தங் களை நினைத்து,

என்மேல் கிருபையாயிரும்.

உமது சிலுவையைத் தழுவ என் கரங்களால் முடி யாதபோது, இப்போது அதை ஆலிங்கனஞ்செய்வதில் நான் காண்பிக்கும் பட்சத்தை மறவாமல்,—

என்மேல் கிருபையாயிரும்.

கடைசியில் வீங்கிச் சீவனற்ற என் நாவினுலே ஒரு வார்த்தையாகிலும் உச்சரிக்கச் சக்தியற்றவனு யிருக்கும் சமயத்தில், இப்போது நான் உம்மைக் கூக் குரலிட்டு அழைத்ததை,—

தயவுடன் நினைவு கூரும்.—ஆமென்சேசு.

சேசு மரி சூசை, என்னுத்துமத்தை உங்களுக்கு ஒப்புக் கொடுக்கிறேன். (300 நாள் பலன்.)

நன் மரணம் அடைவதற்குச் சேசுநாதருக்குத் தோத்திரமான சேபம்.

அவதரித்த தேவ குமாரனே, எங்கள் இரட்சணி யத்தைப்பற்றி ஒரு மாட்டுக்கொட்டகையிற் பிறக்க வும் தாரித்திரத்திலுந் துன்ப இக்கட்டுகளிலும் உம்மு டைய சீவியக்காலஞ் செலவழிக்கவும் சிலுவையில் அறையுண்டு மரிக்கவுந் திருவுளமான திவ்விய சேசுவே! என் மரண வேளையில் உம்முடைய பரலோக பிதாவை நோக்கி என் பிதாவே! அவனுக்குப் பொறுத்தல் கொடுத்தருளும்என்றும், தேவரீருடைய நேச தாயாரை நோக்கி இதோ உம்முடைய குமாரனென்றும், அடியே னுடைய ஆத்துமத்தை நோக்கி இன்று என்னுடன் மோக்ஷத்தில் இருப்பாயென்றுஞ் சொல்லிக் கிருபை புரியும்படி மன்ருடுகிறேன். என் சர்வேசுவரா, என் சர்வேசுவரா அத்தருணத்தில் என்னைக் கைவிடாதேயும்.

தாகமாயிருக்கிறேன் உள்ளபடி என் சர்வேசுவரா உயிர் தருஞ்சலத்தின் ஊறணியாகிய தேவரீர்மட்டில் என் ஆத்துமந் தாகமாயிருக்கின்றது. என் சீவியம் நிழல்போல் கடந்து போகின்றது. கொஞ்சத்துக்குள் சகலமும் முடிந்திருக்கும். ஆகையால் என் ஆராதனைக் குரிய இரட்சகரே! இந்நேர முதல் சதா காலத்துக்கும் என் ஆத்துமத்தைத் தேவரீருடைய திருக்கரங்களில் ஒப்பித்து விடுகிறேன். என் ஆண்டவராகிய சேசுவே, அடியேனுடைய ஆத்துமத்தை ஏற்றுக்கொள்ளும்.—

ஆமென் சேசு.

---

106 சேசுவின் திரு இருதயப் பிரார்த்தனை.

என் சிருஷ்டிகரான சேசுவின் திரு இருதயமே! என்னை சம்பூரணனாக்கியருளும்.

என் இரக்ஷகரான சேசுவின் திரு இருதயமே! எனக்காகச் சமாதானம் பேசியருளும்.

என் பிதாவாகிய சேசுவின் திரு இருதயமே!— என்னை யாண்டு நடத்தியருளும்.

என் நியாயாதிபதியாகிய சேசுவின் திரு இருதய மே! எனக்குப் பொறுத்தல் கொடுத்தருளும்.

என் மத்தியஸதரான சேசுவின் திரு இருதயமே! எனக்காக மனுப் பேசியருளும்.

என் உபாத்தியாயரான சேசுவின் திரு இருதயமே!—எனக்குப் படிப்பித்தருளும்.

என் மேய்ப்பரான சேசுவின் திரு இருதயமே!—என்னை சம்ரக்ஷணை செய்தருளும்.

என் பிரமாணிக்கமுள்ள சிநேகிதரான சேசுவின் திரு இருதயமே!—என்னில் வாசஞ் செய்தருளும.

என் பேரிலுள்ள பக்ஷத்தினிமித்தமாக காயப்பட்ட சேசுவின் திரு இருதயமே!—என்னை ஏற்றுக் கொள்ளும்.

சிலுவையில் மரணமடைந்த சேசுவின் திரு இருதயமே—என்னை இரட்சியும்,

(13 ம் சிங்கராயரேன்னும்)

அர்ச். பாப்பானவரால் புதிதாய் அங்கீகரிக்கப்பட்ட சேசுநாதருடைய திரு இருதயத்திற்கு மனுக்குலத்தை ஒப்புக்கொடுக்கிற ஜெபம்.

ஓ! மிகவும் மதுரம் நிறைந்த சேசுவே! மனுக்குலத்தின் இரட்சகரே! உமது பீடத்தின் முன்பாக சாஷ்டாங்கமாய் விழுந்து கிடக்கும் அடியோர்கள் பேரில் உமது கண்களைத் திருப்பியருளும். நாங்கள் தேவரீருக்குச் சொந்தமானவர்கள் உமக்குச் சொந்தமாகவே நாங்களிருக்கும்படி ஆசையாயிருக்கிறோம். இன்னும் அதிக உண்மையாய்த் தேவரீரோடு ஒன்றித்திருக்கத்தக்கதாக எங்களில் ஒவ்வொருவரும் எங்கள்

மனசார எங்களை இன்றைக்கு உம்முடைய திரு இருதயத்திற்கு ஒப்புக்கொடுக்கிறோம்.

சுவாமி! மனிதர்களுக்குள்ளே அனேகர் தேவரீரை ஒருபோதும் அறிந்ததேயில்லை; வேறே அனேகர் உம்முடைய கற்பனைகளை நிந்தித்துப் பழித்து உம்மை வேண்டாமென்று தள்ளிப் போட்டார்கள். ஓ! மகா தயாளம் நிறைந்த சேசுவே! இவர்கள் எல்லார் பேரிலும் இரக்கமாயிரும்; இவர்கள் எல்லாரையும் உமது திரு இருதயத்தண்டையில் இழுத்தருளும். ஆண்டவரே! உம்மை விட்டு ஒருபோதும் பிரியாமல் என்றும் பிரமாணிக்கமாயிருக்கும் விசுவாசிகளான கிறீஸ்துவர்களுக்கு மாத்திரமேயன்றி உமமை விட்டுப் பிரிந்து போன ஊதாரிப் பிள்ளைகளுக்கும் தேவரீர் இராஜாவாயிருப்பீராக. இவர்கள் எல்லாரும் பசியாலும் துன்பத்தாலும் வருந்திச் சாகாதபடி, தங்கள் தகப்பன் வீட்டுக்குச் சீக்கிரத்தில் வந்து சேரும்படி கிருபை செய்வீராக. அபத்தப் பொய் கொள்கைகளால் ஏமாந்துபோய் இருப்பவர்களுக்கும் விரோதத்தால் விலகியிருப்பவர்களுக்கும் இராஜாவாயிருப்பீராக. எங்கும் ஒரே மேய்ப்பனும் ஒரே மந்தையும் இருக்கும்படி, இவர்கள் எல்லாரையும், சத்தியத்தின் துறை முகத்திற்கும், விசுவாசத்தின் ஒருமைப்பாட்டிற்கும் அழைத்துக் கூட்டிச்சேர்த்தருளும். அஞ்ஞானத்தினுடையவும், இஸ்லாமியத்தினுடையவும் அந்தகாரத்தில் இன்னும் அமிழ்ந்தியிருக்கும் ஜனங்களுக்கும் தேவரீர் இராஜாவாயிருப்பீராக. இவர்களை ஞானத்தின் பிரகாசத்திற்கும், சர்வேசுவர

ளின் இராச்சியத்திற்கும் அழைத்தருளும் சுவாமி! முற்காலத்தில் தேவரீரால் தெரிந்துக்கொள்ளப்பட்ட ஜனங்களாயிருந்தவர்களின் மக்கள்பேரில் உமது கருணைக் கண்களைத் திருப்பியருளும். தங்கள் பேரில் சாபமாக விழ வேண்டுமென்று அவர்கள் கூவி அழைத்த திரு இரத்தம் அவர்களின் இரக்ஷணியத்தினுடையவும், சீவியத்தினுடையவும் ஸ்நானமாக அவர்களுக்கு உதவ கடவதாக.

ஆண்டவரே! உம்முடைய திருச்சபையை அபாயத்திலிருந்து பாதுகாத்துத் திண்ணமான சுயாதீனத்தை அதற்குக் கட்டளையிட்டருளும். சகல தேசத்து ஜனங்களுக்கும் ஒழுங்குக் கிரமத்தையும் சமாதானத்தையும் தந்தருளும். இப் பூமியில் ஒரு கோடி முனை முதல் மறு கோடி முனைமட்டும் ஒரே குரல் சத்தமாய். "நமக்கு இரக்ஷணியம் கொண்டுவந்த திவ்விய இருதயத்திற்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக, மகிமையும் வணக்கமும் சதாகாலமும் வருவதாக" என்ற புகழ் விடாது சத்தித்து ஒலிக்கக்கடவது.—ஆமென் சேசு.

திவ்ய நற்கருணை ஜெபங்கள்.

107 திவ்ய நற்கருணை சந்திப்பு.

மகா அன்புள்ள கடவுளே! ஆச்சரியத்துக்குறிய இரட்சகரே தேவரீர் என்னைக் காப்பாற்ற இம்மாத்திரந் தாழ்ந்து அப்பத்தின் ரூபமாய் தேவ நற்கருணையில்

எழுந்தருளி, என்னை ஆசீர்வதிக்கத் தயைபுரிந்த படியால் சாஷ்டாங்கமாக விழுந்து உம்மை ஆராதிக் கிறேன். சஞ்சலக் கடலில் மூழ்கி சிலுவையிலறை யுண்டு என்னை இரட்சித்த ஆண்டவரே! நான் எனக் குள் ஒடுங்கி நடுங்கி இருகரங் குவித்து பஞ்சேந்திரியம், உள்ளிந்திரியங்களையும் அடக்கிக்கொண்டு உமக்கு நமஸ் காரம் பண்ணுகிறேன். என் ஜீவியத்தைமாற்றி தேவ ரீருக்கு இனி நல்ல ஊழியம்பண்ண வார்த்தைப்பாடு கொடுக்கிறேன். தேவரீரே எனக்கு ஓர் நாள் தீர்வை யிட ஒட்டலோகமாய் வருவீராகையால் அந்தப் பயங்கர மான காலத்திலே என்பேரில் கிருபைவைக்க உம்மை இரந்து மன்றாடுகிறேன், உமது ஜோதிப் பிரகாசத்தை என் கண்ணுற்காணக்கூடாத இப்போது இந்தத் தேவ நற்கருணையில் என் சர்வேசுவரனாகிய தேவரீர் மெய் யாகவே எழுந்தருளி இருக்கிறீரென்று உயிருக்கொட்டி விசுவாசித்து தாழ்ச்சியோடும் பக்தியோடும் உமக்குத் தேவ ஆராதனை பண்ணி எனது ஆசைப் பற்றுதல் எல் லாம் தேவரீர் பேரிலேயே வைக்கிறேன்.—ஆமென்சேசு.

108 திவ்ய நன்மை உட்கோள்ளுமுன் ஜெபம் விசுவாச முயற்சி.

என் ஆண்டவராயிருக்கிற சேசுகிறீஸ்துவே! அடி யேன் தேவ நற்கருணை உட்கொள்ளும்போது, தேவரீர் திருசரீரத்தோடேயும், திரு இரத்தத்தோடேயும், ஆத்து மத்தோடேயும் எழுந்தருளி என்னிடத்தில் வருகிறீ ரென்று உருதியாக விசுவாசிக்கிறேன். தேவரீர் தாமே இதை அறிவித்தபடியினாலே நான் முழுமனதோடு

இதை விசுவாசிக்கிறேன். சுவாமி, இது சத்திமான காரியமென்று ஒப்பிக்கிறதற்கு என் ஜீவனை இழக்க வேண்டி இருந்தாலும் நல்ல மனதோடு இழக்க ஆயத்த மாயிருக்கிறேன்.

"தாழ்ச்சி முயற்சி"

என் அன்பிற்குரிய திவ்ய இரட்சகரே எத்தனையோ விசை தேவரீருக்குத் துரோகஞ்செய்து துக்கம் வரு வித்தேன்! இப்படிப்பட்ட நீசப் பாவியாகிய நானே, தேவரீரை உட்கொள்ளத் துணிகிறது. ஆ! சுவாமி மெய்யாகவே தேவரீர் என்னிருதயத்தில் எழுந்தருள நான் பேருபெற்றவனல்ல, தேவரீர் ஒரு வார்த்தை மாத்திரம் திருவுளம் பற்றுவீரானல், என் ஆத்துமம் வியாதியினின்று விடப்பட்டு ஆரோக்கியத்தையடையும்.

"மனஸ்தாப முயற்சி"

என் சர்வேசுரா! அளவில்லாத நன்மைத்தன முள்ளவரும் மட்டில்லாத சிநேகத்துக்குப் பாத்திரமான வருமாயிருக்கிற தேவரீருக்கு என்பாவ துரோகங்கள் எவ்வளவோ அருவருப்புள்ளதாயிருக்கின்றது ஆண்ட வரே தேவரீருக்கு மனம் நோகப்பண்ணினதினலே மிகவும் மனம்நொந்து உத்தம மனஸ்தாபமாயிருக் கிறேன். இனிமேலாகிலும் தேவரீருடைய அனுக்கிர கத்தைக்கொண்டு நான்செய்த பாவங்களுக்குத் தபசு பண்ணி அவைகளுக்கு ஏதுவான சமயங்கள் யாவும் விட்டு, ஒருபோதும் பாவஞ் செய்வதில்லையென்று

கெட்டியான பிரதிக்கினை பண்ணுகிறேன், என் பிர திக்கினையை உறுதிப்படுத்தியருளும்.

" சிநேக முயற்சி "

ஆ! என் திவ்ய சேசுவே! தேவரீர் என்னை மீட்டி ரட்சிப்பதற்கு உமது உயிரைக்கொடுத்து, எனக்கு போசனமாக உமது திருச் சரீரத்தைத் தந்து எவ் வளவோ அன்போடு என்னைச் சிநேகித்து வருகிறீர். தேவரீரை என் முழு இருதயத்தோடு சிநேகிக்கிறேன். உமது சிநேகத்துக்காக மாத்திரமே ஜீவித்து, உமக் காகவே மரிக்க ஆசையாயிருக்கிறேன் சுவாமி.

" ஆசை முயற்சி "

ஆ ! என் அன்பே ! எழுந்தருளிவாரும் என்னிரு தயத்தைக் கைப்பற்றியருள எழுந்தருளிவாரும். என் ஆத்துமம் தேவரீரை மிகுந்த ஆவலுடனே தேடுகின் றது. வெகு ஆசையோடு தேவரீரை நோக்கித் தாவு கிறது. என் ஆண்டவராயிருக்கிற சேசுக் கிறீஸ்துவே ! எழுந்தருளிவாரும் சுவாமி ! எழுந்தருளிவாரும்.

109 திவ்ய நன்மை உட்கொண்டபின் ஜெபம் ஆராதனை முயற்சி.

ஆ ! என் ஆண்டவரே ! என் சேசுவே ! சாம்பலும் தூசியுமாயிருக்கிற என்னிடத்தில் தேவரீர் எழுந்தருளி வர எப்படி மனம்துணிந்தீர் ! அடியேன் உமது திருச்சமு கத்திலே மகா தாழ்ச்சி வணக்கதுடனே சாஷ்டாங்கமாக

விழுந்து, தேவரீரை ஆதரித்து வணங்கி நகஸ்கரிக் கிறேன்.

"சிநேக முயற்சி"

என் ஆண்டவராயிருக்கிற சர்வேசுவரா! தேவரீர் அன்போடு என்னைச் சிநேகித்து, உம்மை முழுவதும் எனக்குக் கொடுத்ததற்கு என்ன பிரதி நன்றிசெய் வேன்? சிநேகத்துக்குச் சிநேகம் காண்பிக்கிறேன். ஆ என் மதுரசேசுவே! தேவரீரை என் முழுமனதோடு சிநேகிக்கிறேன். என் சீவிய காலமெல்லாம் தேவரீரைச் சிநேகிக்க ஆசையாயிருக்கிறேன். அர்ச்: மரியாயே அர்ச்: சூசையப்பரே நான் சேசுவைச் சிநேகிக்க உங்க ளுடைய சிநேகத்தை எனக்குத் தந்தருளும்படி மன் ருடுகிறேன்.

"நன்றியறிந்த முயற்சி"

என் ஆண்டவராயிருக்கிற சேசு கிறீஸ்துவே! தேவரீர் எனக்கு அளித்தருளிய எண்ணிக்கையில்லாத நன்மை உபகாரங்களுக்காகவும் விசேஷமாய் இன்று நான் உம்மோடு ஐக்யமாகக் கிருபைசெய்த தற் காகவும், முழுமனதோடு தேவரீருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்கிறேன். தகுந்தவிதமாய்த் தேவரீ ருக்கு நன்றியறிந்திருக்க என்னாலே கூடாதென்கிற தினாலே என் இருதயத்தில் வீற்றிருக்கும் தேவரீ ருடைய இருதயத்தைத் தானே தேவரீருக்கு நன்றி யறிந்த தோத்திரமாக ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி.

"காணிக்கை முயற்சி"

ஆ! என் திவ்ய இரட்சகரே என் சரீரத்தையும் அதின் இந்திரியங்களையும், என் ஆத்துமத்தையும் அதின் புலன்களையும் என் இருதயத்தையும் அதின் உணர்ச்சிகளையும், தேவரீருக்கு காணிக்கையாக ஒப்புக் கொடுக்கிறேன், என் சிந்தனை ஆசை, வாக்குக் கிரியை கள் முதலிய சகலமும் இனி உமக்கே சொந்தம். தேவரீர் உம்மை முழுதும் எனக்குக் கொடுத்ததுபோல, நானும் தேவரீருக்கு என்னை முழுதும் ஒப்புக்கொடுக் கிறேன் சுவாமி.

"மன்றாட்டு முயற்சி"

சகல நன்மைக்கும் ஊரணியான சர்வேசுரா! தேவரீர் உம்மை முழுமையும் எனக்குக் கொடுத்திருக்க இன்னமும் எதாகிலும் எனக்குக் கொடுக்காமல் இருக்கக் கூடுமா? ஆ! என் திவ்ய சேசுவே அடியேன் தேவரீரை முழு இருதயத்தோடு எப்போதும் சிநேகித்து வரக் கிருபை செய்தருளும் என் பாவங்களை அருவருத்து அவைகளை இனி செய்யாதபடி என் பிரதிக்கினையை ஆசீர்வதித்தருளும். உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருக்கிற ஆத்துமாக்கள் நித்திய இளைப்பாற்றி யடையத் தயை புரியும். பரிசுத்த திருச்சபைக்கும், எங்கள் ஞான பிதாவாகிய அர்ச்: பாப்பனவருக்கும், அவசியமான இஷ்டபிரசாதங்களைச் சம்பூரணமாய்க் கொடுத்தருளும், எங்கள் தாய் தந்தை பெரியோர்கள், சிநேகிதர்கள்,

சத்துராதிகள் இவர்கள் பேரிலும் தயவாயிருந்து இவர்களுடைய அவசர சமயங்களில் உதவியாய் இருக்கும்படி தேவரீரை மன்றாடுகிறேன். ஆண்டவரே என் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி.—ஆமென்சேசு.

110 ஆசை நன்மை ஜெபம்.

என் அன்பான சேசுவே! தேவரீர் தேவ நற்கருணையிலே மெய்யாகவே எழுந்தருளியிருக்கிறீரென்று உறுதியாக விசுவசிக்கிறேன். நான் தேவரீரை எல்லாத்துக்கும் மேலாக சிநேகித்து, தேவரீர் என் ஆத்துமத்திலே எழுந்தருளி வந்து வாசம் பண்ண வேணுமென்று மிகவும் ஆசைப்படுகிறேன். ஆனல், தேவரீர் இந்நேரத்தில் தேவ நற்கருணை மூலமாக என்னிடத்திலே வரக்கூடாதபடியால், ஞானவிதமாயாவது எழுந்தருளி வாரும் சுவாமி! நீர் மெய்யாகவே என்னிடத்தில் எழுந்தருளியிருப்பதுபோல் எண்ணிப் பாவித்து, உம்மை நான் அரவணைத்து, என்னை முழுதும் உமக்கு ஒப்புக்கொடுகிறேன். நான் எப்போதும் உம்மை விட்டுப் பிரிந்து போகாதபடி எனக்கு அனுக்கிரகம் பண்ணியருள வேண்டுமென்று உம்மை ஆவலோடு மன்றாடுகிறேன்.—ஆமென் சேசு.

111 அரச்: சகாய மாதா ஜெபம்.

திவ்ய தாயே, அடியேனுக்கு உதவி செய்ய உம்மால் இயலாதென்று என்னைப் புறக்கணியாதேயும், ஏனெனில் உமது திருக்குமாரன் பரலோகத்திலும் பூலோகத்

திலும் உமக்குச் சர்வ அதிகாரங் கொடுத்திருக்கிறார். அல்லது என்னைக் கைதூக்கி இரட்சிக்க உமக்குக் கடனில்லை என்பீரோ அல்ல, ஏனெனில் ஏவையின் மக்கள் எல்லோருக்கும் விசேஷமாய் அடியேனுக்குந் தேவரீர் தாயாராக நியமிக்கப்பட்டீரே, ஆகையால் இரக்கம் நிறைந்த கன்னிகையே! தேவரீர் என் தாயாராகையாலும் எனக்கு உதவி செய்து தற்காக்க எவ்விதத்திலும் ஆட்சேபனை சொல்லமாட்டார். என் நல்ல தாயாரே என் மன்றாட்டிற்கு இரங்கி, என் விண்ணப்பங்களுக்கு அநுகூலந் தந்தருளும்—ஆமென் சேசு.

112 பரிபூரண பலனடைய ஜெபம்.

மகா மதுரம் பொருந்திய நல்ல சேசுவே! அடியேன் தேவரீருடைய திருச்சமுகத்தில் முழந்தாளிலிருந்து சாஷ்டாங்கமாக விழுந்து, என் கைகளையும் என் கால்களையும் துளைத்தார்கள், என் எலும்புகளெல்லாம் எண்ணினார்களென்று தேவரீரைப்பற்றி முன்னர் தாவீதென்கிற தீர்க்கதரிசி உமது வாயின் வாக்கியமாக வசனித்ததை என் கண் முன்பாகக் கண்டு, தேவரீருடைய ஐந்து காயங்களையும் மிகுந்த மன உருக்கத்தோடும் என்னுள்ளத்தில் விசாரித்து நினைவில் தியானிக்கிற இந்நேரத்தில் திடமான விசுவாசம், நம்பிக்கை தேவ சிநேக மென்கிற சுகிர்த கருத்துகளையும் என் அக்கிரமங்களின்மேல் மெய்யான மனஸ்தாபத்தையும், அதுகளை திருத்த மெத்த உறுதியான பிரதிக்கினையையும் என் இருதயத்தில் பதிய செய்தருளவேண்டுமென்று, என் நல்ல சேசுவே தேவரீரை என் ஆத்துமத்தில் மேலான ஆசை ஆவலோடு இரந்து, மன்றாடி பிரார்த்திக்கிறேன்.—ஆமென் சேசு.

குறிப்பு: பரிபூரண பலனடைய சேசுக்கிறீஸ்து நாதருடைய ஐந்து திருக்காயங்களைக் குறித்தும், அர்ச்: பாப்பானவர் சுகிர்த கருத்துக்கள் அநுகூலமாகவும் பர. பிரி. திரி. மந்திரம் சொல்லவும்,

———

காலை ஜெபம்.

காலைகண் விழிக்கும்போது :—

பிதாவுடையவும் சுதனுடையவும் ஸ்பிரீத்து சாந்துடையவும் நாமத்தினாலே ஆமென் சேசு. சேசுமரிசூசை என் இருதயத்தையும், என் ஆத்துமத்தையும்உங்களிடம் ஒப்படைக்கிறேன், ஓ என் ஆண்டவரே, நீர் இங்கு பிரசன்னமாயிருப்பதை விசுவசித்து, என் முழு இருதயத்தோடு நேசித்து உம்மை ஆராதிக்கிறேன். எனக்கு நீர் அளிக்கும் எல்லா ஆசீர்வாதங்களுக்கும் நான் நன்றி பறிந்த தோத்திரம் செலுத்த, இந்த நாளின் என் கடமைகளையும், நினைவுகளையும், வார்த்தைகளையும், இதனால் நான் அடையக்கூடிய ஞான பலன்களை யெல்லாம், பரிசுத்தகன்னிமரியாயின் கரத்தில் ஒப்புக்கொடுக்கிறேன். 3. பிரி. மந்திரம், மாசில்லாத அமலோற்பவ மாதாவுக்குத் தோத்ரமாகச் சொன்ன பிறகு,

ஓமரியே, என் தாயே. என் நம்பிக்கையே, உன் அடைக்கலத்தில் நான் சீவித்து மரிக்கத் தஞ்சமடைந்திருப்பதால், என்னைப் பாவத்தினின்று நீக்கி உனது பூரண ஆசீர்வாதத்தை எனக்கு தந்தருளும். 1. பர. பிரி. விசுவாச மந்திரம் சொல்லவும்.

பகல் ஜெபம்.

வேலை துவக்கும்போது.—

ஓ ஆண்டவரே, எல்லாம் உமக்குரியதே ; ஓ என் சேசுவே எல்லாம் உமது மகிமைக்காகவே.

சோதனைவரும்போது.—

சேசு மரியே எனக்கு உதவி யருளும், அல்லது 1. பிரி. சொல்லவும்.

கோபம் வரும்போது சொல்லவேண்டியவை.

ஓ என் சேசுவே, எனக்குப் பொறுமையைக் கொடுத்தருளும், என் மரி தாயே என் நாவை யடக்கி யருளும்.

குற்றம் செய்தபோது சொல்லவேண்டியவை.—

ஓ என் ஆண்டவரே, உமக்கு விரோதமாகப் பாவம் செய்ததால் நான் மிகவும் மனஸ்தாபப்படு கிறேன். ஏனென்றால், நீர் மாசற்றவரா யிருக்க நான் இனி ஒருகாலம் பாவத்தைச் செய்யாமலிருக்க எச்ச ரிக்கையா யிருப்பேன்,

சாப்பிடும் முன்னும், பின்னும்.—

சிலுவை அடையாளம் வரைந்து பரமதிரித்துவத் திற்குத் தோத்திரம் சொல்லவும்.

ஒருவரொருவரைச் சந்திக்கும்போதும், விட்டுப் பிரியும் போதும் சொல்வது.

கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக.

114 இராச் செபம்

சொல்ல வேண்டிய முறை.—

குடும்ப செபமாலை, இராச்செபம், ஆத்துமசோதனை செய்து உத்தம மனஸ்தாப மந்திரம் செபித்து 3-பிரிய

தத்த மந்திரமும், காலையில் சொல்லும் மரியாயின் சிறு செபமும் சொல்வது.

சயனிக்கு முன்.—

படுக்கையில் உன் கரங்களைச் சிலுவை பாவனையாக சோடித்து சொல்ல வேண்டியதாவது. நான் சாக வேணும், எப்போது, எங்கே, எவ்வந்தஸ்த்தில் எனக்குத் தெரியாது. ஆனால், நான் சாவான பாவத்தி னந்தஸ்தில் மரிப்பேனானால் நான் நித்தியத்திற்கும் அழிந்து போவேன். ஓ சேசுவே, என்பேரில் கிருபையாயிரும்.

விசுவாச சத்தியங்கள்

கீழ் குறித்தவைகளைப் பன்முறை சொல்லவும்.—

விசுவாசம்.—

ஓ என் ஆண்டவரே, திருச்சபை போதிக்கும் சத்தியங்களைத் தேவரீர் தாமே உண்மையாய் அறிவித்திருக்கிறபடியினாலே, நான் முழுமனதோடு விசுவசிக்கிறேன்.—

நம்பிக்கை.—

ஓ என் ஆண்டவரே, தேவரீர் வாக்குத் தத்தம் கொடுத்திருப்பதால், எனக்கு உம்முடைய வரப்பிரசாதங்களையும், மகிமை பாக்கியத்தையும் தந்தருளுவீரென்று நம்பியிருக்கிறேன்.

தேவ சிநேகப் பிறர் சிநேகம்.—

ஓ என் ஆண்டவரே, தேவரீர் மட்டில்லாத சிநேகத்திற்குப் பாத்திரமாயிருக்கிறபடியினாலே, உம்மை நான் முழுமனதோடு சிநேகிக்கிறேன். ஏனென்றால், உம்மைப்பற்றி, என்னை நான் நேசிப்பதுபோல, என் அயலாரையும் நேசிக்கிறேன்.

உத்தமமனஸ்தாப மந்திரம், முன்போல் சொல்லவும்.—

115 திரிகால ஜெபம்.

ஆண்டவருடைய சம்மனசானது மரியாயியுடனே விசேஷஞ் சொல்லிற்று.—

அவள் இஸ்பிரீத்து சாந்துவினாலே கற்பணியானாள்.—பிரி.

இதோ ஆண்டவருடைய அடிமையானவள்.—

உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக் கடவது.—பிரி.

வார்த்தையானது மாம்ஸமாகி.—எங்களுடனே கூட வாசமாயிருந்தது.—பிரி.

பிரார்த்திக்கக் கடவோம்.

சர்வேசுவரா சுவாமி, சம்மனசு சொன்னதினாலே உமக்குக் குமாரனாகிய சேசுக்கிறீஸ்து மனுஷனானதை

அறிந்திருக்கிற நாங்கள் அவருடைய பாடுகளினுலேயும சிலுவையினுலேயும் உத்தானத்தின் மகிமையை அடையத்தக்கதாக, எங்களுக்கு அநுக்கிரகம் பண்ணியருள வேண்டுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறேம். இந்த மன்ருட்டுக்களையெல்லாம் சேசுகிறீஸ்து நாதருடைய திருமுகத்தைப்பார்த்து எங்களுக்குத் தந்தருளும்—ஆமென் சேசு.

116 பாஸ்குக் காலத்தின் திரிகால செபம்.

பரலோகத்து இராக்கினியே! மனங்களிக்கூரும் அல்லேலூய்யா!

அதேதெனில் பாக்கியவதியான உமது திரு உதரத்தில் அவதரித்தவர் அல்லேலூய்யா!

திருவுளம் பற்றின வாக்கின்படியே உயிர்த்தெழுந்தருளினர். அல்லேலூய்யா!

எங்களுக்காகச் சர்வேசுவரனை மன்ருடும். அல்லேலூய்யா!

மு—எப்பொழுதுங் கன்னிகையான மரியாயே அகமகிழ்ந்து பூரிக்கக்கடவீர், அல்லேலூய்யா!

து—அதேதெனில் ஆண்டவர் மெய்யாகவே உத்தானமாயினர். அல்லேலூய்யா.

பிரார்த்திக்கக் கடவோம்.

சர்வேசுவரா சுவாமி, உம்முடைய திருக்குமாரனுமாய் எங்கள் ஆண்டவருமாயிருக்கிற சேசுக்கிறீஸ்துவின் உத்தானத்தினுலே உலகங்களிக்கச் சித்தமானீரே. கன்னிமரியாயியாகிய அவருடைய திருத்தாயாராலே நித்திய ஜீவியமான பரலோகவாழ்வை நாங்கள் அடையும்படிக்கு அநுக்கிரகம் பண்ணியருளும். இந்த மன்ருட்டுக் களையெல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுநாதருடைய திருமுகத்தைப்பார்த்து எங்களுக்குத் தந்தருளும், ஆமென் சேசு. (திரி)

117 அர்ச்: ரீத்தம்மாளை நோக்கிச் செபம்.

அவசாத்திலிருப்பவர்களின் பரிபாலினியாகிய அர்ச்: ரீத்தம்மாளே! சர்வேசுவரனிடத்தில் நீர் கேட்கும் மன்ருட்டுக்கள் ஒருபோதும் தடுக்கப்படாததாலும், உம்மை நோக்கி மன்ருடுகிறவர்களுக்கு நீர் பொழிகிற ஏராளமான உபகார சகாயங்களாலும் நீர் நம்பிக்கையற்றவர்களுக்கும், கைவிடப்பட்டவர்களுக்கும் பரிபாலினியென்று அழைக்கப்படுகிறீர். அர்ச்: ரீத்தம்மாளே! தாழ்ச்சி, பரிசுத்தத்தனம், ஒறுத்தல், பொறுமை முதலிய புண்ணியங்களிலும், சிலுவையிலறை யுண்ட சேசுவின் பேரில் கொண்ட அத்தியந்த இரக்க நேசத்திலும், நீர் அதிகரித்திருக்கிறீராதலால், நீர் அவரைக் கேட்பதெல்லாவற்றையும் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளக் கூடியவளா யிருக்கிறீர். இதினிமித்தம் நம்பிக்கையுடன்

உம்மை யண்டிவந்து, நாங்கள் கேட்கும் எல்லா உதவியையும் பெற நாங்கள் பாத்திரவான்களாயில்லாவிட்டாலும், ஆறுதலையாவது பெறுவோமென்று எதிர் நோக்குகிறோம். உம்மை நோக்கிப் பிரார்த்திக்கிறவர்களுக்காக சர்வேசுவரனிடத்தில் உமக்குள்ள செல்வாக்கை உபயோகித்து, எங்கள் மன்றாட்டுக்கு அநுகூலமாயிரும். சர்வேசுவரனுடைய பெரு மகிமைக்காகவும், உம்முடைய பத்தி பரம்புதலுக்காகவும், உம்மிடத்தில் நம்பிக்கை வைக்கிறவர்களின் ஆறுதலுக்காகவும், அநேக ஆச்சரியமான விஷயங்களில் நீர் உதவி புரிந்ததுபோல, இப்பவும் எங்களுக்கு உமது உதவியை ஏராளமாகப் பொழிந்தருளும். எங்கள் வேண்டல் தந்தருளப் படுமாகில், நீர் செய்த உபகாரத்தை வெளிப் படுத்துவதால் உம்மை மகிமைப்படுத்தி, உமது புகழ்ச்சியை என்றென்றைக்கும பாடிப் புகழ வாக்களிக்கிறோம். சேசுவின் திரு இருதயத்தினிடத்தில் உமக்குள்ள வல்லமை பேறு பலன்கள் மட்டில் நம்பிக்கைவைத்து உம்மை நோக்கி வேண்டிக் கொள்வ தேதெனில், [இவ்விடத்தில் நீர் கேட்கும் மன்றாட்டைச் சொல்லிக் கொள்ளவும்.] இந்த மன்றாட்டைத் தயவோடு எனக்குப் பெற்றுத் தந்தருள உம்மைமன்றாடுகிறேன்.—ஆமென் சேசு.

118 அர்ச்: சூசைப்பரைக் குறித்து சுகிர்த மன்றாட்டு.

கிருபைதயாள நிறைந்தவருமாய், எங்கள் நேச வணக்கத்துக் குரியவருமாயிருக்கிற பிதாப் பிதாவாகிய அர்ச்: சூசையப்பரே! தேவரீரை மன்றாடி, தேவரீ

ருடைய அடைக்கலத்தைத் தேடி உம்மிடத்தில் தாம் இரந்து கேட்டதை அடையாமற்போனதில்லையென்று அர்ச்: தெரேசம்மாள் நிச்சயித்ததை நினைத்தருளும். என் அன்புள்ள தகப்பனுரே, இப்படிப்பட்ட நம்பிக்கையால் ஏவப்பட்டு, நான் உம்முடைய திருப்பாதத்தை அண்டிவருகிறேன். பெருமூச்செறிந்தழுது பாவியாயிருக்கிற நான் உமது தயாளத்துக்குக் காத்துக்கொண்டு, உமது சமுகத்தில் சாஷ்டாங்கமாக விழுகிறேன். மிகவும் இரக்கமுள்ள பிதாப் பிதாவாகிய அர்ச்: சூசையப்பரே: சொற்பமும் அயோக்கியமு மாயிருக்கிற என் மன்ருட்டைப் புறக்கணியாமல் தயாபரராய்க் கேட்டுக் கிருபை புரிந்தருளும்—ஆமென்சேசு.

சேசுவின் மகா பரிசுத்த இருதயத்தை நேசிக்கிறவர்களுக்குப் பாதுகாவலும், முன் மாதிரிகையுமான அர்ச்: சூசையப்பரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். (100 நாள் பலன்.)

---

119 அர்ச்: பார்பரம்மாள் ஜெபம்.

சர்வேசுவரா சுவாமி! ஜீவிக்கிறவர்களுக்கும் மரிக்கிறவர்களுக்கும் ஆறுதலைக் கொண்டுவர, உமது அடியாளாகிய அர்ச்: பார்பரம்மாளைத் தெரிந்தெடுத்துக் கொண்டீரே! அவள் மன்ருட்டினுல் நாங்கள் உமது தெய்வீக அன்பிலே என்றென்றைக்கும் உயிர் வாழவும்'

உமது திவ்விய சுதனுகிய சேசுநாத சுவாமியின் வியாகுலம் நிறைந்த திருப்பாடுகளின் பேறு பலன்களின் மேல் எங்கள் நம்பிக்கையெல்லாம் வைக்கவும் கிருபை செய்தருளும்; அதனுல் பாவிகளுக்கு வரும் அவதி, சடுதி மரணம் எங்களுக்கு வராமல், பாவசங்கீர்த்தனம் செய்து, தேவநற்கருணையுட்கொண்டு, அவஸ்தைப் பூசுதலும் பெற்று மரித்துச் சற்றும் பயமில்லாமல் நித்திய பேரின்ப மோட்ச பாக்கியத்தில் பிரவேசிக்கப் பண்ணியருளும்.

ஆண்டவரே! பூமிக்குள் பல்லாயிரம் அடிகள் புகுந்து நாடோறும் வேலை செய்யும் எங்களுக்கு நேரவிருக்கும் பயங்கரமான அபாயங்களிலிருந்து, எங்களின் பரிசுத்த பாதுகாவலியான அர்ச்: பார்பரம்மாளின் மன்ருட்டினுல், எங்களைக் காப்பாற்றியருளும் இந்த மன்ருட்டுகளை யெல்லாம் எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்து நாதரின் திரு முகத்தைப் பார்த்துத் தந்தருளும்.—ஆமென்சேசு.

---

120 Asperges,—அஸ்ப்பேர்ஜேச்.

அஸ்ப்பேர்ஜெஸ் மே, டோமினெ, இசோப்பொ எத் முன்டாபொர்: லவாபிஸ் மே, எத்சூப்பெர் நீவெம் டெஅல்பாபொர்.—மிசெரேரெ மேஇ, டேஉஸ், செக்கூன்டும் மாஞம் மிசெரிக்கோர்டியம் தூ அம்.

ரக்லோரியா பாத்ரி, எத் 'வீலியொ, எத்ஸ்பிரீது இ சாங்க்தொ,—சீக்குத் எரத் இன்ப்ரின்கூபிப்பியொ, எத் நூங்க் எத் செம்ப்பெர், எத் இன் செத்குல செக்குலோய ரும்—ஆமென்.

குரு.—ஓஸ்தேன்டெ நோபிச், டோமினெ, மிசெ ரிக்கோர்டியம் தூஅம்.

சீ.—எத் சலுதாரெ தூஉம், டா நோபிஸ்.

கு.—டோமினெ, எக்செளடி ஒரத்சியோனெம் மேஅம்.

சீ.—எத் க்லாமொர் மேஉஸ் அட் தெவேனியத்.

கு.—டோமினுச் வொபீஸ்க்கும்.

சீ.—எத் கும் ஸ்பீரிது தூஒ.

121 Vidi Aquam,—வீடி ஆக்கு-அம்.

வீடி ஆக்கு-அம் எரக்ரொடியேந்தெம் டெதேம் ப்லோ, அ லாதெரொ டேக்ஸ்த்ரொ, அல்லெலூயா எத் ஓம்னெஸ் அட் கு-ஒஸ் பெர்வேனித் ஆக்கு-அ ஊஸ்த சால்வி 'வாக்தி சுந்த், எத் டீச்செந்த், அல்லெ லூய, அல்லெலூய.

கொன் 'விதேமினி டோமினெ கு—ஒனியம் hபோனுஸ்: கு—ஒனியம் இன் செக்குலும் மிசெரிக் கோர்டிய எயுஸ்.

ஓக்லோரிய பாத்ரி எத் ஃபீலியொ, எத் ஸ்பிரீ துஇ சாங்க்தொ.—சீக்குத் எரத் இன் பிரிங்கூப்பியொ, எத் நுங்க் எத் சேம்ப்பெர், எத் இன் சேக்குல செக்கு லோரும். ஆமென்.

கு.—ஒஸ்தேன்டெ நோபிச், டோமினெ, மிசெ ரிக்கோர்டியம் தூஅம், அல்லெலூயா.

சீ.—எத் சலுதாரெ தூஉம், டா நொபிஸ், அல்லெ லூய.

கு.—டொமினெ, எக்செளடி ஓரத்சியோனெம் மேஅம்.

சீ.—எத் க்லாமொர் மேஉஸ் அட் தெவெனியத்.

கு.—டோமினுச் வொபீஸக்கும்.

சீ,—எத் கும் ஸ்பிரீது தூஓ.

122 குழந்தை சேசுவின் அர்ச்: தெரேசம்மாள் ஜெபம்.

குழந்தை சேசுவின் அர்ச்: தெரேசம்மாளே! சிறிய சுகந்த புஷ்பமே! தேவ சிநேகத்தினுல் பற்றி யெரிந்த கன்னிகாரத்தினமே, துன்பப்படுகிறவர்களுக்கு ஆறுதலே! அண்டிவந்தவர்களைக் கைவிடாத பேருப காரியே அம்மா! பாவி நான் உம்மை நம்பிவந்தேன். நான் கேட்கும் மன்றாட்டைப் புறக்கணியாமல், தயை யுடன் சேசுவின் திரு இருதயத்தினின்று பெற்றுக் கொடுத்தருள்வீராக, ஆமென் சேசு.—3 பர: 3 பிரி: திரி.

The
Good Pastor Press,
2, Armenian Street,
Madras.